கலை இலக்கிய மாத சஞ்சிகை

216

ஐப்பசி 2023

10.10.2023

ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

## அன்பு ஜவஹர்ஷா சிறப்பிதழ்


திக்குவல்லைக்கமால்

கெகிராவ ஸுலைஹா

எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார்

எல்.வஸீம் அக்ரம்

நாச்சியாதீவு பர்வீன்

வதிரி சி.ரவீந்திரன்

மு.பஷீர்

பேனா மனோகரன்

அல் அஸுமத்

பாத்திமா நிஸ்ரின்

அன்பு ஜவஹர்ஷா





பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம் 02 MAR 2024 யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2023 - ஐப்பசி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

கட்டுரைகள்


**அன்பு ஜவஹர்ஷா**
**ஒரு தனி மனித நிறுவனம்**
திக்குவல்லை கமால்........................... 03

**அனுராதபுரத்தின் அடையாளம் என்கின்றேன் அன்பு ஜவஹர்ஷாவை**
கெக்கிறாவ ஸுலைஹா........................ 05

**அன்பு ஜவஹர்ஷாவின் கல்விப்பணிகள்**
எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார்.......... 08

**அநுராதபுர மாவட்ட இலக்கிய முதுசொம் கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா**
எல். வஸீம் அக்ரம்................................ 10

**வழிகாட்டியாக வாழும் அன்பு ஜவஹர்ஷா**
வதிரி சி.ரவீந்திரன்.............................24


**அன்பு ஜவகர்ஷா என்னும் ஆலமரம்...**
பேனா மனோகரன்.................................28

**காவிகளும் ஒட்டுண்ணிகளும்**
மு.பஷீர்................................................31


கவிதைகள்


தமிழ்மாமணி அல் அஸூமத் - 29

பாத்திமா நிஸ்ரின் - 30

நேர்காணல்


அன்பு ஜவஹர்ஷா 19





பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


கவிதை


அன்பு ஜவஹர்ஷா- 18




கடிதம்


கே.எம்.எம்.ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 ஐப்பசி இதழ் - 216**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–


### அனுராதபுரத்தின் இலக்கிய, கல்வி அடையாளமாக விளங்கும் அன்பு ஜவஹர்ஷா

ஈழத்து கலை இலக்கியப் பரப்பில் தன் ஆளுமைத்திறனால் இலக்கிய உலகை உய்வித்துக் கொண்டிருக்கும் மூத்த வாழும் படைப்பாளிகளை ஜீவநதி கௌரவித்து சிறப்பிதழை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த மாத ஆளுமைச் சிறப்பிதழாக அன்பு ஜவஹர்ஷா அவர்களது சிறப்பிதழை வெளியீடு செய்து வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம். அன்புதாசன் என்ற புனைபெயரில் பல கவிதைகளை எழுதிய கவிஞரின் மகனான இவர் இளமைக்காலம் முதல் வாசிப்பில் நாட்டம் உள்ளவராகவும் கல்வியில் ஆர்வமுள்ளவராகவும் விளங்கினார். அனுராதபுர மாவட்டத்தில் இலக்கியம் செழித்து வளர்ந்து வருவதற்கு இவர் பல பணிகளை ஆற்றியுள்ளார். கல்வியியலாளராக, ஆய்வாளராக, கவிஞராக, இலக்கியச் செயற்பாட்டாளராக அதிபராக, ஆசிரியராக, சமூக செயற்பாட்டாளராக, கல்வி ஆலோசகராக விளங்கி வருபவர். புதுக்கவிதைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். காவிகளும் ஒட்டுண்ணிகளும் என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டு பெரும் வரவேற்பை பெற்றுள்ளார். பல நூல்களை தொகுத்து வெளியிட்டுள்ளதோடு "அநுராதபுரத்தின் முதுசொம்" என்னும் ஆவணப்படுத்தல் நூலையும் வெளியிட்டுள்ளார். பல இளம் இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஊக்கமளித்து அவர்களது இலக்கிய செயற்பாடுகளுக்கு துணை நிற்பவராக விளங்குகிறார். கல்விச் சமூகத்தின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கும் பல நூல்களையும் சிறு பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றார். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் அன்பு ஜவஹர்ஷா பல பட்டங்களையும் கௌரவிப்புகளையும் பெற்றுள்ளார். அநுராதபுர மாவட்டத்தில் தமிழ் மக்களை முன்னேற்ற பெரும் பாடு பட்டு உழைப்பவர். கலை இலக்கிய, கல்விச்சேவையால் உயர்ந்து நிற்கும் அன்புஜவஹர்ஷா தொடர்ந்தும் பயணிக்க வாழ்த்தி அவரை கௌரவித்து இச்சிறப்பிதழை வெளியிடுவதையிட்டு மகிழ்கின்றோம்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை கமால்.

# அன்பு ஜவஹர்ஷா ஒரு தனிமனித நிறுவனம்

பலாலி ஆசிரியர் கலா சாலைக்கு பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கடிதம் வந்திருந்தது. அதன்படி 1973/74 ம் வருடங்களை அங்கு கழிக்க வேண்டும்.

நான் போக இருப்பது இலக்கிய மையமான யாழ்ப்பாணத் திற்கல்லவா என்பதை நினைத்துப் பூரித்துப்போனேன். பயிற்சி எப்படிப் போனாலும் அந்த இரண்டு வருடங் களையும் முழுமையாக இலக்கிய ரீதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். கூடவே அதற்குத் தோதான நண்பர்கள் கிடைப்பார் களா என்ற கேள்வியும் எழாம லில்லை.

அதற்கு இரண்டே நாளில் விடை கிடைத்துவிட்டது. தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு நெருங்கி வந்தார் அன்பு ஜவஹர்ஷா. அடுத் தடுத்த நாட்களில் ஜவாத் மரைக் கார், மூதூர் முகைதீன், முதல் வருடத்தைச் சேர்ந்த கலைவாதி கலீல்... இப்படி நாமொரு குழுமமாகி விட்டோம். சந்திக்கும் போதெல்லாம் இலக்கியம் தவிர்ந்த வேறெந்தப் பேச்சும் எம்மிடையே இருக்கவில்லை.

***

முதல் வார இறுதியிலேயே நானும் ஜவஹர்ஷாவும் "மல்லிகை" அலுவலகத்திற்குச் சென்றோம். டொமினிக் ஜீவாவோடு முன் அறிமுகம் அவருக்கு இருந்தது.

இப்படி ஆரம்பித்த எமது இலக்கியப் பயணத்தின் மூலம் எமக்கு முற்பட்ட, சமகால, பிற்பட்ட இலக்கியவாதிகளை எல்லாம் சந்திக்கவும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிந்தது. நூல் வெளியீடுகளுக்கெல்லாம் சென்றோம். பொதுவாக யாழ் பொது நூலக மேல் மாடியிலேயே அவை நடைபெற்றன. தொடர்புபட்ட இலக்கிய நண்பர்கள் பலாலிக்கும் வந்து சென்றனர்

***

1970/80 தசாப்தம் இலங்கையில் புதுக்கவிதை மேலோங்கிய காலமாகும். இதில் அன்பு ஜவஹர்ஷாவின் பங்களிப்பு தனியாகப் பேசப்பட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டில் "வானம்பாடி" குழுமம் சார்ந்த பலரோடு அவர் தொடர்பில் இருந்தார். அதன் மூலம் ஆரம்பகால புதுக்கவிதை சஞ்சிகைகள், பிரசுரங்கள், நூல்கள் அவருக்கு வந்தன. அதனை அவர் நண்பர் மத்தியில் பரவலாக்கம் செய்தார். அவர் எழுதியதோடு பலரையும் எழுதவைத்தார். ஏன் இலங்கைச் சிறப்பிதழின் தொகுப்பாளர்களில் ஒருவராக இயங்கினார். அவ்வப்போது தமிழ் நாட்டுக்கும் போய் வந்தார்.

இவற்றோடு திருப்தி அடைந்துவிடாது எண்பது களுக்கு முற்பட்டகாலப் புதுக் கவிதையின் எழுச்சி, வளர்ச்சி, வெளியீடுகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய நீண்ட கட்டுரை ஒன்றைக் கொழும்பில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் முன்வைத்தார். இது ஒருகட்ட இலங்கைத் தமிழ் கவிதையின் வரலாறாக பலராலும் சிலாகிக்கப்பட்டது.

***

பிற்பட்ட காலத்தில் அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகள் சம்பந்தமாக நிறைய எழுத ஆரம்பித்தார். கல்வி நிர்வாகம் தொடர்பான சிக்கல் களுக்கு சுற்று நிருபங்களை முன்வைத்து தீர்வை நெருங்கும் ஆலோசனைகள் வழங்கினார். அது சம்பந்தமான வெளியீடுகளும் செய்தார்.

இவை பலருக்கும் உபயோகமான விடயம்தான். அதற்காக ஓர் இலக்கியவாதியை விட்டுக் கொடுக்க முடியுமா? "காவிகளும் ஒட்டுண்ணிகளும்" என்ற கவிதைத் தொகுதியைத் தவிர வேறெதுவும் வெளிக் கொணரப் படவில்லை. குறைந்த பட்சம் முகநூலில் தொடராக எழுதிய "அழியாத கோலங்க" ளையாவது நூலுருப் படுத்தினால் அது ஏராளமான விடயங்களைப் பேசும்.

***

இவர் அநுராதபுரம் ஸாகிறாவில் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் பாடசாலை நிர்வாகம், கட்டுக்கோப்பு, ஒழுக்க சீலம் பற்றி வவுனியா கல்வி அலு வலகத்தில் பரவலாகப் பேசப்பட்டதுண்டு. அப்போது நான் அங்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்தேன்.

ஒரு பாடசாலை நாளில் வந்து பார்ப்பதாக முடிவாயிற்று. வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், குறிப்பிட்ட சில அதிபர்களுமாக அங்கு வந்தோம்.

அப்படியொரு அமைதி அங்கு நிலவியது. பாடசாலைச் சூழலில் ஒரு மர இலைகூட விழுந்திருக்கக் காணப்படவில்லை. இடைவேளையின்போது மாணவர் கள் அல்லோல கல்லோலப்படுவது இயல்பு. எந்த வொரு ஆசிரியரும் இல்லாதபோதும் தேனீர்ச் சாலைக்குக்கூட மாணவர்கள் வரிசையில்தான் நின்றார்கள். இத்தனைக்கும் அதிபர் அன்று கடமை நிமித்தம் வெளியே சென்றிருந்தார்.

***

பலாலிக் காலத்தில் அடிக்கடி அநுராதபுரம் விஜயம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அதனால் அங்கு வாழ்ந்த இலக்கிய ஆர்வலர்கள் பலரதும் தொடர்பு கிட்டியது. குறிப்பாக பேனா மனோகரனின் நட்பு. அவர் வீட்டில் விருந்துண்டு மகிழ்ந்ததெல்லாம் இன்னும் நினைவிலுண்டு.

அப்போதெல்லாம் அநுராதபுரம் கலைச் சங்கத்தின் பொற்காலம். அன்பு ஜவஹர்ஷாவும் பேனா மனோகரனும் இணைச் செயலாளர்களாக இயங்கினர். அங்கு உத்தியோகம் பார்த்த வடபகுதித் தமிழ் மக்கள் பரவலாக வாழ்ந்தனர்.

ஒருமுறை "சிதைந்து போகும் சிறப்புகள்" என்ற தலைப்பில் ஒரு கவியரங்கு நடாத்துமாறு கேட்டனர். கவியரங்கு சிறப்பாக நடந்தேறியது. அடுத்த சில வாரங்களில் அதையொரு தொகுப்பாக்கி கையில் கொண்டு வந்து தந்தார் ஜவஹர்ஷா. எதையும் உடனுக்குடன் ஆவணமாக்கி விடுவதில்ல வல்லவர் அவர்.

இன்னொரு தடவை " மரபுக் கவிதை ஏன்?"- என்ற தலைப்பில் அண்ணல் சாலிஹும் "புதுக் கவிதை ஏன்?"- என்ற தலைப்பில் நானும் பேசினோம்.

***

1995 இன் பின்னர் மு.மேத்தா இலங்கை வந்திருந்தார். அவருக்கு டொமினிக் ஜீவாவின் சம்பந்தி வீட்டில் மதிய விருந்து ஏற்பாடாகி இருந்தது. அங்கு மேத்தாவுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பின்னர் அவர் என்னோடு "ஜவஹர்ஷாவுடன் கதைக்கணும்"- என்றார். எங்கள் இருவருக்கும் இடையிலான தொடர்பை அவர் அறிந்து வைத்திருந்தார் போலும். அவர் கேட்டபடி தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

அப்போதைய புதுக் கவிதைப் பிரபலங்களோடு ஜவஹர்ஷாவுக்கு இருந்த தொடர்பு பலரும் அறியாத ரகசியம்.

***

அநுராதபுர மாவட்டத்தில் பாரம்பரியமான இலக்கிய முயற்சிகள் நடைபெற்று வந்தபோதிலும் எழு பதுக்குப் பின்னரான இந்த அரைநூற்றாண்டு காலத்தில் அன்பு ஜவஹர்ஷாதான் முதன்மை பெறு கிறார்.

அவர் சார்ந்த இலக்கிய நடவடிக்கைகள் புதிய சந்ததியினருக்கு ஆதர்ஷமாக அமைந்துள்ளது. அழகிய நெறிப்படுத்தலும் நடந்துள்ளது. அவரிடம் ஆலோசனை பெறாத எந்த எத்தனங்களும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

அநுராதபுர தமிழ் இலக்கிய அடைவுமட்டம் மகிழ்ச்சி தரும்படியாக அமைந்து வருகிறது. புதிய இலக்கியத் தலைமுறையினர் அன்பு ஜவஹர்ஷாவை இலக்கியத் தந்தையாகவே கொண்டாடுகின்றனர்.

***

சமூகம், கல்வி, இலக்கியம் என்று இவர் ஆற்றிய பணிகள் ஏராளம். உதவி, அனுசரணை பெற்றுக்கொண்டு இவர் காரியமாற்றவில்லை என்பது வெளிப்படையானதே.

தனது நேரத்தையும் சிரமத்தையும் பணத்தை யும் அர்ப்பணித்தே பணி செய்துள்ளார். அவரது இரத்தத்தில் ஓடும் அன்பும் அறமும் அவரை இவ்வா றெல்லாம் செய்ய வைத்துள்ளது.

அன்பு ஜவஹர்ஷாவால் ஆற்றப்பட்டுள்ள பொதுப்பணிகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஒரு நிறுவனம் செய்திருக்க வேண்டிய அளவு தேறும்.

ஆம்; ஜவஹர்ஷா ஒரு தனிமனித நிறுவனம் தான். அது என்றும் இயங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறிதிலும் சிறிதான மகளாய் ஒரு பென்னம்பெரிய தந்தையைப் பற்றி நான் சொல்ல விழைகிறேன். முதலில், உயர்திரு. அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கு ஒரு சிறப்பு மலரைத் தயாரிக்கும் சிந்தனைக்குள் ஓடோடி வந்து வயப்பட்ட "ஜீவநதி" பரணீதரன் மகனுக்கு என் தீராத நன்றியறிதல்களைச் சொல்லிக் கொள்கிறேன். இதற்குமுன்னம் ஓய்வு பெற்றுச் செல்கின்றவேளை அனுராதபுரத்தின் முதுசொம் அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கென்று ஒரு பிரியாவிடை மலர் 2005களில் வெளியிட்டார்கள். அது ஞாபகம் வருகிறது. நிறையபேர் அவரைப்பற்றி நிறைய சொல்லியிருந்தார்கள் அந்த மலரில். என் அக்கா கெக்கிறாவ ஸஹானா அவர் குறித்து எழுதிய ஒரு ஆத்மார்த்தமான கட்டுரையும் எங்கள் கைகளில் இருக்கிறது. பிறப்பால் மட்டுமே ஒருவருக்கு இத்தனை சிறப்புகள் வந்துவிடுமா என்று நான் யோசித்துப் பார்க்கிறேன். அவரின் அன்பின் பக்கங்களைச் சொல்ல ஆயிரம் இருக்கிறது. சிரிப்பைத்தவிர சினத்தையும் சிடுசிடுப்பையும் அவர் முகத்தில் பெரும்பாலும் காண நேர்ந்ததில்லை என்பதில் இருந்தும் தொடங்குகிறேன் நான்.

அன்புதாசன் என்று அழைக்கப்பட்ட அப்துல் காதர் முகம்மது ஹனிபா அவர்களுக்கும், நாகூர் மீரா அகமது முத்து தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை அன்பு ஜவஹர்ஷா அவர்கள் அனுராதபுரத்தில் பிறந்தார்கள். அவரது பெயரின் பின்னிருக்கும் கதை பற்றி சொல்வதெனில், அன்பு என்பது அன்புதாசன் என்ற புனைபெயருடைய தந்தை வழி வந்தது. அவர் கொழும்பு கொம்பனித் தெருவில் பிறந்து எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் கடமையாற்றினார். அனுராதபுரத்தில் மணமுடித்து அங்கே குடியேறி வாழ்ந்தபோது 1950.11.03இல் பெற்றெடுத்த தமது மூத்த புதல்வனுக்கு தனது பெயரில் ஒரு பகுதியை இட்டு, அடுத்த பகுதியை பாரதப் பிரதமராக அக்காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த ஜவஹர்லால் நேருவிடம் இருந்து பெறுகிறார். ஜவஹர்லால் நேருவிடம் கொண்டிருந்த மரியாதையால் அப்படிச் செய்கிறார் அவர். அடுத்த பகுதி நமது இலக்கிய நண்பராகிய பித்தன் கே.எம்.எம்.ஷா அவர்களின் ஞாபகார்த்தமாகச் சூடப்பட்டது. ஆக, தமது மகன் எதிர்காலத்தில் அரசியலுக்கோ, இலக்கியத்துக்கோ சேவையாற்ற வேண்டும் எனும் வேணவா இருந்திருக்கலாம். எனினும், மகனுக்கு ஏழு வயது நடக்கும் போதே தந்தையார் காலமாகிவிட்டார். அந்தத் தந்தையரது கனவுகள் கனிந்து வந்தன. மகன் இலக்கிய உலகிற்குள் அடியெடுத்து வைக்கும்போது

## அனுராதபுரத்தின் அடையாளம் என்கிறேன் அன்பு ஜவஹர்ஷாவை...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன் ஷாதான் இதனைக் ஒரு கடிதம் மூலமாக எழுதி அறியத்தந்ததை பின்னரே மகனுக்கு விபரமாகச் சொன்னதாக திரு.திக்குவல்லை கமால் அவர்கள் வாயிலாக அறிகிறோம்.

அனுராதபுரம் என்கின்ற நகரம் இலங்கையில் மிகப் பிரசித்தமானது. இலங்கையின் முதலாவது இராஜதானி என்ற பெருமை பெறுவது. மட்டுமல்ல, இலங்கையின் மிகப் பெரிய மாகாணம் என்ற சிறப்பும் இன்னும் பல பெருமைகளும் அதற்கு உண்டு. அவ்வாறே "அன்பு ஜவஹர்ஷா" என்ற பெயருக்கும் பல மாண்புகள் உள்ளன. அனைவருடனும் அன்புடன் பழகும் தன்மை, ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுவோருக்கு அதைச் செய்து கொடுக்கும் அன்புவழி, இவற்றிற்கு மனிதத் தன்மையுடன் கூடிய பேச்சுவன்மை இவையே அவரின் வெற்றியின் மாபெரிய அத்திபாரங்கள். யார் எந்த இடத்தில் எந்த நேரத்தில் உதவி என்று சென்றாலும் தன்னால் முடியுமோ மறுபேச்சுக்கு இடமின்றி அதன்பால் செயற்படும் மனித நேயம், சீரிய பண்பு அவரின் அடையாளம் என்கிறேன்.

இலக்கிய உலகில் வடமத்திய மாகாணத்தில் முதன்முதல் கலாபூஷண விருது பெற்ற ஒரே முஸ்லிம் எங்களைச் சேர்ந்த அன்பு ஜவஹர்ஷா அவர்களே என்பதில் பெருமிதம் எங்களுக்கும். அனுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையில் 1997களில் அதிபராகினார் அவர். அதன் வரலாற்றை கண்டும் கேட்டும் அனுபவித்தும் செயற்படும் எவராலும் இவரின் நாமத்தை இன்றளவும் புறந்தள்ளி விட முடியாது. பாடசாலையின் பாரம்பரியமும் நாமமும் நிமித்தம் பாடுபட்டவர்களில் அவர் பெயர் முதலாவதாய் மதிக்கப் பட்டும் வந்துள்ளது என்றால் மிகையில்லை. பாட சாலையை அவர் தன் மூச்சாகக் கண்டு கொண்டி ருந்தார். அந்த பாடசாலையில் அவர் ஒரு தந்தையைப் போல நிறைவாக உலா வந்தவர். அவர் அந்த இடத்தில் வெகு அழகான விடியல் போல.

இருக்கும் சூழலை அழகுற மரஞ்செடிகொடி களால் அலங்காரம் செய்யும் பண்பும் வாய்த்திருந்தது அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கு. ஓய்வு பெறாமல் அவர் ஓய்வு பெற்றுப்போகையில் அவர் நட்டிய மரங்கள் கூட அசையாமல் நின்று அவருக்கு மரியாதை செய்ததை ஒரு மாணவி தன் கவிதையில் பதிவு செய்திருந்தார் பிரியா விடை நூலில். நானும் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் பற்றி ஒரு கவிதை எழுதினேன் அந்த மலரில், "பக்தியின் கதவடியில்.." என்ற தலைப்பில்.

பெருங்கடலை உருவாக்கும்
சிறுதுளிகள் என்று பெயர்தான் எமக்கு.
நீரோட்டத்தில் திசையேயறியாது திண்டாடி நகரும்,
சருகுகளெனவே நம் வாழ்க்கை.
மனுஷனாய் மனுஷனே கூட இருக்க முடியாத
இருண்ட யுகத்தில்,
நல்லாசானாகப் பரிமளித்தல் எத்தனை அசாத்தியம் ?

கற்பித்தலின் நுட்பம் கிஞ்சித்துமறியா
உத்தி யோக வாழ்வு
தவறும் கொடுமையுமென நீளுமோர்
தறி கெட்ட வழிமுறை.
பசி, பட்டினி, துரோகம், அவமானம் போன்றன
எதிர்காலப் பிரதிபலன்களாய் உருவாக் கத்தக்கவோர்
ஒழுங்கு விதிமிக்க கல்விக் கொள்கை
சீர்த்திருத்தமென நம் கைகளில்..
கள்ளிமுள் பதித்த பிரம்பில் பிள்ளைகளை விலாசுமோர்
ஹிட்லர்தனம் கை வந்த கலையென நமக்கு..
கூக்குரலிடவும் கோரிக்கையெழுப்பவும்
கோடி பேர் இங்கே.
அன்பு எனும் ஆயுதத்தை தவறியும் கையில் எடோம்.
அடுத்தவரிடத்தே காணும் நல்லதை,
அவர் தம் சாதனையை,
மனம் திறந்து தவறியேனும் பாராட்டோம்.
கண்ணியம், கம்பீரம் முற்றிலுமாய்
இழந்தே போனோம்.
விதியை மாற்ற வல்லமை பெற மாட்டோமா?
ஆற்றாமை எரித்த இதயம்
ஒரு விளக்குக்காய் அழுதிருக்கையில்,
விடியலையே கைகளிலேந்திய ஒரு சூரிய தரிசனம்.
அன்பு ஜவஹர்ஷா !

உங்கள் கம்பீரம் எம்மை நிமிர்த்திற்று.
உதட்டோரம் தவழும் புன்சிரிப்பு,
கர்வம் கிஞ்சித்துமில்லாப் பணிவு,
சாதித்து விட்டதாய் இறுமாப்பு ஏதுமில்லை.
இரவு பகல் பாரா நித்திய அலைச்சல்.
அன்பின் மிகையால்,
அன்பு ஜவஹர்ஷா உங்களை
வழிபடத் தோன்றியிருக்கிறது எனக்கு..

"நல்லாசானாய் இருப்பது ஒன்றும்
அத்தனை அசாத்தியமில்லை."
நம்பிக்கை, ஆனந்தம் நிரம்பிய,
புதிய காலத்தின் பிறப்பில்
ஹிருதயம் ஆர்ப்பரிக்கிறது!!

மட்டக்களப்பு புனித மரியாள் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்தவர் தந்தையின் மறைவுக்குப் பிறகு மீண்டும் அனுராதபுரம் வந்து புனித கன்னியர் மடம், புனித வளனார் கல்லூரி, விவேகானந்தா கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். வளனார் கல்லூரியில் மாணவர் தலைவனாகத் தெரிவு செய்யப் பட்டதை தனக்குக் கிடைத்த முதல் கௌரவமாக இன்றும் நினைவு கூர்கிறார். மாணவனாக இருக்கும் போதே அப்போது உயிரியல் ஆசிரியராகப் பணியாற்றிய ஞானராஜா அவர்களால் நடாத்தப்பட்ட "மாணவர் குரல்" சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமையாற்றி யதுடன் பல கையெழுத்துப் பத்திரிகைகளிலும் எழுதினார். தொடர்ந்து, சுதந்திரன், கதம்பம் ஆகிய இதழ்களிலும், பின்னர் தினபதி, மித்திரன், உட்பட மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சஞ்சிகையிலும் சிறுவர் ஆக்கங்கள் எழுதினார். 1967இல் வை.எம்.எம்.ஏ உடன் இணைந்து கொண்ட துடன், 1968இல் அனுராதபுர ஸாஹிராக் கல்லூரியின் ஆரம்பத்தோடு அதன் அபிவிருத்திப் பணிகளிலும் பெரிதும் ஈடுபட்டு உழைத்தார். இச்சங்கத்தின் செய லாளராக பின்னர் உயர்ந்தார். அத்துடன் அக்காலத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணியில் இணைந்து கொண்டார்.

ஆசிரியர் தொழிலை இலட்சியமாகக் கொண்டு 1971இல் விவசாய விஞ்ஞான ஆசிரியர் நியமனம் பெற்று நொச்சியாகம, நாச்சியாதீவு, அனுராதபுர ஸாஹிரா ஆகிய பாடசாலைகளில் சேவையாற்றினார். அங்கு மாணவருக்கான "பிறையொளி" சஞ்சிகையை நடாத்தினார். 1972இல் பேனா மனோகரன், மாவை நித்தி யானந்தன் ஆகியோருடன் இணைந்து அனுராதபுரம் கலைச்சங்கத்தைத் தொடங்கினார். அதன் மூலமாக மாதமொரு முறை பாரதி விழா, கலந்துரையாடல் முதலிய இலக்கிய நிகழ்ச்சிகளை இச்சங்கம் நடாத்தி யது. அப்படியொருமுறை, அனுராதபுரம் கலைச்சங்கம் ஏற்பாட்டில் அன்பு ஜவஹர்ஷா அவர்கள், அவர்களது தோழமைகளான திரு. பேனா மனோகரன், திரு.எம்.ஏ.எம் இப்றாகிம், திரு.க. மெய்யழகன், திருமதி. மெய்யழகன், திரு.எஸ்.எச்.முஹமது ஸஹீர், மாத்தளை திரு.வடிவேலன் அவர்கள், மாத்தளை திரு.பாலா அவர்கள், மூதூர் திரு.மொஹிதீன் அவர்கள், திரு.ஜவாத் மரிக்கார் என ஒரு பெரு நட்புப் பட்டாளத்தையே இணைத்துக் கொண்டு 1975களில் "களம்" என்றொரு சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வுக்காக அமைத்திருந்த ஒரு அழைப்பிதழை சமீபத்தில் நான் திரு.ஜவாத் மரிக்கார் அவர்களின் முகநூல் பக்கத்தில் பகிரக் கண்டிருந்தேன். அந்த நிழ்விலே கவியரங்கம் என்றும், பாரதி விழா சொற்பொழிவுகள் என்றும் "தேவன் வந்தான்" நாடகம் என்றும் நிறைய வகை கதம்பங்கள் இருந்தன. அந்த வகை ஏற்பாடுகளில் முன் இடத்தில் நின்றுழைக்கும் தினவு அன்பு ஜவஹர்ஷா அவர்கள் வசம் இருந்தது. தோழமை ஆளுமைகளோடு இன்றளவும் பேணி வரும் நட்பும் அவரிடம் நாம் கற்க வேண்டிய அம்சமாகிறது.

இவ்வாறு பல கவியரங்கங்கள், கலைக்கோலம் என்பன நடாத்தப்பட்டதுடன், அக்காலத்தில் கவி யரங்குகள் பிரபலமாக நடந்து கொண்டிருந்தமை யினால், இலங்கையில் நடந்த அவ்வாறான கவிதா நிகழ்ச்சிகளில் வாசிக்கப்பட்ட கவிதைகளைத் தொகுத்து "சிதைந்து போகும் சிறப்புகள்", "புத்துலகம் படைப்போம்" போன்ற தொகுதிகளையும் வெளியிட்டார். இவ்வாறு இலக்கியத்தையும் ஆசிரியத்தையும் ஒருசேர வைத்திருந்த பெரு உள்ளமும், கொள்கையும் அவரிடம் இருந்தது. 2016களில் திரு.பேனா மனோகரன் அவர்கள் இலங்கைக்கு தன் இணையருடன் வருகை தந்திருந்த போது நடத்தப்பட்ட இலக்கிய நிகழ்ச்சியில் நானும், அக்கா ஸஹானாவும் கலந்து கொண்டிருந்தோம். திரு.பேனா மனோகரன் அவர்களது முதலாவது கவிதைத்தொகுதி "சுமைகள்" கூட அனுராதபுரம் கலைச்சங்கத்தால் வெளியிடப்பட்டது என்பதையும், அக்கவிதைத் தொகுதியின் விலை அப்போது ஒரு ரூபாய் என்றும் அவர்கள் நமக்கு வழங்கிய நினைவலைகளில் இருந்து தெரிந்து கொண்டோம். அந்த நிகழ்வினை ஏற்பாடு செய்த அன்பு ஜவஹர்ஷா அவர்கள் நிகழ்வு நிமித்தம் மாவை நித்தியானந்தன் ஐயா அவர்கள் உட்பட பல கலைச்சங்க உறுப்பினர்களை அழைத்துப் பேச வைத்து இருந்தார் என்பதையும் நினைவிற் கொண்டு வருகிறேன்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் எங்கள் அன்பிற்கினிய இலக்கியத் தந்தையர் அன்பு ஜவஹர்ஷா வும் அவர்களது தோழர் பெருமக்கள் திக்குவலை கமால், கலைவாதி கலீல், மூதூர் முஹைதீன், ரைத்தலாவல அஸீஸ், மற்றும் ஜவாத் மரிக்கார், "வேதாந்தி" சேகு இஸ்ஸதீன், "அரும்பு" அறிவியல் ஏட்டின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆகியோரும் ஒரு பெருவட்டத்தை அமைத்திருந்ததையும், "யாழ்பிறை" சஞ்சிகையின் செயலாளராக தொழிற்பட்டு புதுக் கவிதைகள் பால் இயங்கியதையும் அறிகிறேன். அப்போதைய அவரின் பிரசவம்தான் அவரது "காவி களும் ஒட்டுண்ணிகளும்" கவிதைத் தொகுதியாகும். 1975களில் வெளியான அவரது "காவிகளும் ஒட்டுண்ணி களும்" பெரும்பாலும் வறுமை பற்றி, அதன் துயரம் பற்றி, அது மேல்மட்டத்தினரால் ஒரு கோசமாக பயன் படுத்தப்பட்டமை பற்றிப் பேசும்.

அவரை அன்பு நிறைந்த ஒரு கணவராக நான் கண்டிருக்கிறேன். மன்னார் தாராபுரத்தைச் சேர்ந்த அவரின் துணைவியாரும் மணம்புரிந்து அனுராதபுரவாசி யாகவே மாறியிருந்தார். அவரும் தன் கணவரை அந்தளவுக்கு இதயத்தில் தாங்குபவரே என்பதையும் கண்டிருக்கிறேன். எனது, அக்காவினது நூல்களை பிரசுரித்து முடித்த கையுடன் அவருக்கே எங்கள் முதல் பிரதிகளைக் கொடுத்து வந்தோம்.அப்படி ஆசீர்வாதம் பெறும் ஒரு பழக்கத்தை இன்றளவும் கைக்கொண்டு வருகிறேன். எனது 2015 களில் சாகித்திய மண்டலப் பரிசை வென்ற மொழிபெயர்ப்புத் தொகுதியை நான் அவரின் நேய ஆன்மாவுக்குச் சமர்ப்பணம் செய் திருந்தேன். ஒரு பிள்ளையாக, ஒரு ஆசிரியையாக, ஒரு அதிபராக, ஒரு இலக்கியவாதியாக அவரிடம் இருந்து பெற நிறைய இருக்கிறது. ஆதலால், அவரிடம் அடிக்கடி சென்று வருகிறேன். அந்த பிரியாவிடை மலரில் அவரை ஒரு குளிர்விருட்சம் என வர்ணனை செய்திருக்கிறார்கள். உண்மைதான். அவர் இருதயநோய் கண்டு உயிருக்காக போராடிய தருணத்தில் அவருக்காக இறைவனிடம் இறைஞ்சிய பல இதயங்களே அவர் நல்ல அதிபராகவும், நல்ல மனிதராகவும் வாழ்ந்தார் என்பதை எடுத்துக் காட்டு கிறது. இன்றளவும் அவரது மாணிக்க ஒளிப் பண்புகள் மறையவேயில்லை. அனுராதபுரத்திற்கு மட்டுமன்றி அகில இலங்கைக்கும் அவர் குரல் கேட்டபடிதான். ஒரு மகளாக அவரை வாழ்த்துவதில் நானும் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஜவஹர்ஷா என்ற பெயரில் ஓர் இலக்கியவாதியாக எழுத்தாளராக அறிமுகமாகியிருந்த A.C.M. ஜவஹர்ஷாவை முதன் முதலாக 1973 ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சக பயிற்சியாளர்களில் ஒருவராக நேரில் சந்தித்தேன். அவருடன் இன்னும் சில எழுத்தாளர்களும் சம காலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற அங்கு வந்திருந்தனர். இலக்கியம் எம்மிடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தியது. நாம் நெருங்கிய நண்பர்களானோம். இன்று வரை அந்த நட்பு தொடர்கின்றது.

பின்னாளில் அன்பு ஜவஹர்ஷா இலக்கிய ஆக்கங்களிலிருந்து விலகி வேறொரு துறையில் கால் பதித்து எழுதத் தொடங்கினார். அது கல்வி சார்ந்த துறை; கல்விசார் ஊழியர்களுக்குப் பெரும் பயனளிக்கும் துறை. தமிழில் இலக்கியங்களை ஆக்குவதற்குப் பல்லாயிரம் பேர் இருந்தபோதிலும் ஜவஹர்ஷா தேர்ந்தெடுத்த துறையில் எழுதுவோர் மிகச் சொற்பம் என்றே கூறவேண்டும். அதனால் அன்பு ஜவஹர்ஷாவின் எழுத்துகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பல்லாயிரம் பேருக்குப் பயனளிக்கக்கூடியதாவும் அமைகின்றன.

மட் /சிசிலியா கன்னியர் மடம், அ /புனித கன்னியர் மடம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும் அ /புனித வளனார் கல்லூரி, அ / விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியையும் பெற்ற ஜவஹர்ஷா, 1971 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றார். நொச்சியாகம முஸ்லிம் வித்தியாலயம், நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயம், அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரி, தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் மன்னார் கல்வி வள நிலையப் பொறுப்பதியாகப் பணியாற்றினார். அதன் பின்னர் போட்டிப் பரீட்சை மூலம் தொழினுட்பப் பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டு மன்னார் மாவட்டத்தில் பணியாற்றினார். அதிபர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று 1989 ஆண்டு தொடக்கம் தரம் 2 அதிபராக நியமனம் பெற்றார். பின்னர் 1990 முதல் மன்னார் அல்அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் அதனைத் தொடர்ந்து (1990 - 1992) அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரியில் பிரிவுத் தலைவராகவும் பணியாற்றினார். 1991 ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம் தரம் 1 அதிபராக நியமனம் பெற்றார். 1993ஆம் ஆண்டு அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பதவி ஏற்ற இவர் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டில் ஓய்வு பெறும்

# அன்பு ஜவஹர்ஷாவின் கல்விப் பணிகள்

எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றினார். தனது சேவைக் காலத்தில் அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறியையும் வெற்றிகரமாக இவர் நிறைவு செய்தார்.

அன்பு ஜவஹர்ஷா பிரதி அதிபராகவும் அதிபராகவும் அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் அவரின் முகாமைத்துவச் சிறப்பை நேரில் காணும் வாய்ப்பு பல தடவை எனக்குக் கிடைத்தது. முன்மாதிரியானதொரு அதிபராக அவரை நான் காண முடிந்தது. வடமத்திய மாகாணத்தின் சிறந்த அதிபர் என்ற விருதை அப்போதைய ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்கவிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

ஜவஹர்ஷா ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய கால கட்டங்களிலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு மிக்கவராகவிருந்தார். ஆசிரியராக நியமனம் பெற்ற புதிதிலேயே அப்போது பலமிக்கதாகவிருந்த "இலங்கை ஆசிரியர் சங்க" உறுப்பினராக இணைந்தார். ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி பெற்ற காலத்தில் இலங்கையில் உருவான "சுதந்திர ஆசிரியர் சங்க" உறுப்பினராகவும் அவர் இணைந்தார். 1975 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அநுராதபுர மாவட்ட தமிழ்ப் பிரிவின் செயலாளராக நியமிக்கப்பட்ட பின்னர் ஆசிரியர், அதிபர் உரிமைகளுக்காகப் பல்வேறு போராட்டங்களை ஒழுங்கு செய்ததோடு அப்போராட்டங்களில் முன்னணிப் போராளியாகவும் செயற்பட்டார்.. இக்காலப் பகுதியில் ஆசிரியர்களும் அதிபர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் பற்றிய ஆக்கங்களை எழுதி, பத்திரிகைகள் மூலமும் சிறு நூல்கள் மூலமும் வெளியிட்டார். தமிழ் மொழியில் மாத்திரமன்றி சிங்கள மொழியிலும் தனது ஆக்கங்களையும் கைந்நூல்களையும் வெளியிட்டார்.

1992ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட "தரம் பெற்ற அதிபர்கள் சங்க" தாபக உறுப்பினரான இவர் 2004 ஆம் ஆண்டு இச்சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை முழுதும் 8000 க்கு மேற்பட்ட பெரும் பான்மைச் சமூக அதிபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கத்தின் தலைமைப் பதவிக்குச் சிறு பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஜவஹர்ஷா தலைவராக நியமிக்கப்பட்டமையொன்றே அவரது அர்ப்பணிப்புக்கும் நேர்மைக்கும் கடின உழைப்புக்கும் போதுமான சான்றாகும்.

ஆரம்பத்திலிருந்தே அன்பு ஜவஹர்ஷா என்ற பெயரில் மாத்திரமன்றி பல்வேறு புனைபெயர்களிலும் இவர் எழுதினார். மாணிக்கராசன், அனுஷா, தமிழ் வேந்தன், வன்னிக்குமரன், பிர்தவ்ஸி, துஷாட், திரையன்பன், ஞானா என்ற பெயர்களில் கவிதைகள், கட்டுரைகள் தகவற் குறிப்புகள் போன்றவற்றை அவர் எழுதியுள்ளார். அவரின் ஆக்கங்கள் தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள் போன்றவற்றில் வெளிவந்துள்ளன. இலங்கையில் மாத்திரமன்றி தமிழ்நாட்டுச் சிற்றேடுகளிலும் இவரின் ஆக்கங்கள் வெளிவந்தன. வானொலி, மேடைக் கவிஞராகவும் 1970 - 80 களில் அவர் பெயர் பெற்றிருந்தார். ஊடகத் துறையிலும் இவர் கால் பதிக்கத் தவறவில்லை.

பிற்காலத்தில் கல்வி சார்ந்த பிரச்சினைகள், கல்விசார் ஊழியர்களின் தொழில் தொடர்பான பிரச்சினைகள், சம்பளம் தொடர்பான பிரச்சினைகள், ஓய்வூதியம், தொடர்பான பிரச்சினைகள், கல்விச் சட்டங்கள் பற்றிய விளக்கங்கள், நியமனங்கள் பற்றிய தகவல்கள் போன்றவற்றை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தத் தொடங்கினார். பொது நிருவாக அமைச்சு, கல்வியமைச்சு ஆகியவற்றால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் தொடர்பான அறிவை இற்றைப்படுத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டிய இவர், தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவையும் மேம்படுத்திக்கொண்டார். இவை தொடர்பாக ஊடகங்களில் தொடர்ந்து எழுதி வருவதோடு ஆசிரியர், அதிபர்களுக்கான கருத்தரங்குகளில் வளவாளராகப் பங்குகொண்டு நேரடியாக விளக்கங்களையும் அளித்து வருகின்றார். கல்விசார் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கும் வகையில் பல்வேறு கையேடுகள் இவரால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன தனது சொந்தச் செலவில் அவற்றைப் பதிப்பித்துப் பெரும்பாலும் இலவசமாகவே அவர் விநியோகித்தார். ஆசிரியர் /அதிபர் சம்பள மாற்றங்கள் பற்றி விளக்கமாவும் விலாவாரியாகவும் இவர் எழுதி வருவதால் நண்பர்களால் "சம்பள எழுத்தாளர்" என்று நகைச்சுவையாக அழைக்கப்படுவதுமுண்டு. ஆம், தான் சம்பளம் எதுவும் பெறாமல் பிறர் சம்பளம் பற்றி எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர் இவர்.

இலங்கைத் தமிழ்த் தேசியப் பத்திரிகை வரலாற்றில் முதன்முறையாக ஆசிரியர் /அதிபர்களுக்காக ஒரு முழுப்பக்கத்தை "தினகரன்" நாளிதழ் 1998 ஆம் ஆண்டு ஒதுக்கியது. "குருபீடம்" என்ற பெயரில் இப்பக்கத்தைத் தயாரித்தளிக்கும் பொறுப்பு எனக்களிக்கப்பட்டது. 1998 - 2002 வரை ஐந்தாண்டுகள் வாரமொரு நாள் வெளிவந்தது. குருபீடத்திற்கு விடயதானமளித்ததில் அன்பு ஜவஹர்ஷாவின் பங்கு முக்கியமானது. ஆசிரியர் /அதிபர்களுக்கு பயனளிக்கும் பல ஆக்கங்களை ஜவஹர்ஷா குருபீடத்தில் தொடர்ந்து எழுதினார். அவரின் ஆக்கங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

குருபீடம் நின்ற பின்னர் தினக்குரல் பத்திரிகையில் இப்பணியை ஜவஹர்ஷா தொடர்ந்தார். காலப்போக்கில் தொடர்பாடல் துறையில் முகநூலும் முக்கியத்துவம் பெறவே அதையும் தனது பணிகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார் ஜவஹர்ஷா. அவரது முகநூல் பக்கம் ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் அருஞ் செல்வமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

அன்பு ஜவஹர்ஷாவின் கல்விப் பணி எவ்வித தடையுமின்றித் தொடர்ச்சியாக நடைபெறும் விதத்தில் அவரின் ஆரோக்கியமும் குடும்ப வாழ்க்கையும் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல். வஸபம அகரம

# அநுராதபுர மாவட்ட இலக்கிய முதுசொம் கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா

அநுராதபுரம் இலக்கியத்திற்கு ஒரு புதுமுகத்தை காட்டிய பிரதேசங்களில் ஒன்றாகும். அதற்கு பல நுண்ணிய காரணங்கள் உண்டு. மேல்நிலையான ஒரு வாசிப்பாலனால் அதனை உணர்ந்து கொள்ள முடியும் என்று சொல்ல முடியாது. அந்த வகையில் அநுராதபுரத்திற்கான இலக்கியத்தை நிமிர்ந்து நிறுத்திய ஒரு பிதாமகன் பற்றிய பதிவே இது.

அநுராதபுர மாவட்டத்தில் சுமார் 9வீதமான சிறுபான்மை மக்கள் வாழ்கின்றனர். இவர்களது சமூக இருப்புப் பற்றிய பதிவுகளை இலக்கியங்களே தருகின்றன. இங்கு நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற சிறுபான்மை மக்களது வாழ்க்கை பற்றிய பதிவுகள் மிக அரிதாகவே கிடைக் கின்றன. இன்று சிங்களப்பிரதேசமாக முகிழ்ந்தாலும் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் களுக்கு "குட்டி யாழ்ப்பாணம்" என்ற அடைமொழியுடன் இப்பிரதேசம் இருந்துள்ளதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப்பிரதிகள் வாயிலாக அறிய இயலும். இங்கு சமூக இருப்பின் அடையாளங்களை வரலாற்றுச் சான்றுகளுடன் நிருபிக்க வல்ல ஒருவர் பற்றிய மிக முக்கிய குறிப்புகள் இவை.

அநுராதபுரத்தின் இலக்கியபிதாமகனாக தேசிய ரீதியில் எவர் மனதிலும் இருக்கின்ற ஒரு பெயர் தான் கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா. ஒரு கல்விய லாளராக, ஆய்வாளராக, கவிஞராக, இலக்கியச் செயற் பாட்டாளராக, சிந்தனையாளராக, சமூக சேவகராக என்று பல்பரிமாண கதாபாத்திரமாக வளம் வருகின்றார்.

பல்வேறு இலக்கிய ஆளுமைகளை சந்தித்துள்ள நாம், அவர்களின் தனித்துவங்களை பதிந்துகொள்வதில் நமக்குள்ள வகிபங்கு ஒருவரை விஞ்சி ஒருவர் நம்முன் விதைகின்றார் எனில் அதற்குள் ஆயிரம் அர்த்தமுள்ள காரணங்கள் பொதிந்துள்ளன. எனது பாடசாலை அதிபராக இருந்து எம்போன்ற பல இளையதலைமுறையினரை உருவாக்கிய எமது மாவட்டத்தின் இலக்கியத் தந்தை பற்றிய இப்பதிவுகள் இன்றைய இலக்கிய கடமையாகவும் தேவையாகவும் இருப்பதை இலக்கிய உலகம் நன்கறியும்.

### கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா அவர்களின் இலக்கியப் பயணம்

அரச துறைசார்ந்த எல்லா உத்தியோகத்தர் களுக்கும் விசேடமாக ஆசிரியர்களுக்கு இலங்கை முழுவதும் அநுராதபுரம் என்றவுடன் முன்நிற்கும் பெயர்தான் இந்த கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா.

இவரது தந்தை ஒரு கவிஞன். அன்பு தாசன் என்ற புனைப்பெயரில் ஆக்கங்களை எழுதிக் கொண்டி ருந்தார். சிறுவயதிலே தனது தந்தையை இழந்த கலா பூஷணம் அன்பு ஜவஹர்ஷா தந்தையின் பின்புலத்தினா லும் தனது பள்ளி ஆசிரியர்களின் ஊக்குவிப்பாலும் தனது ஆர்வத்தினாலும் தான் 7ஆம் வகுப்பு கற்கும் போதே இலக்கிய உலகில் தடம்பதித்துக்கொண்டார்.

அநுராதபுரம் சென் ஜோசப் கல்லூரி மாணவராக இருந்த காலப்பகுதியில் மாணவர் குரல் எனும் பாடசாலைச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந் தமை இவரது எழுத்து முயற்சிகளுக்கு கால்கோளிட்ட தாகும். அத்தோடு இளைஞனாக இருந்த காலப்பகுதி யில் புத்தொளி தமிழ்ச்சுடர் ஆகிய கலை இலக்கிய இதழ்களை வெளியிடுவதில் இணையாசிரியராகவிருந்து பங்களித்துள்ளார்.


1960களில் அநுராதபுரத்தில் பல்வேறு கையெழுத்து சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டி ருந்தன. 1960 முதல் 1970 வரையான காலப்பகுதி அநுராதபுரம் கையெழுத்துச் சஞ்சிகைகளின் பொற்காலம் எனலாம். மறைந்த அமீர்சுல்தான், பி.ஏ.சி. ஆனந்தராசா இருவரையும் அசிரியராக கொண்டு "இளைஞர் குரல்" என்ற சஞ்சிகையை வெளியிட்டனர். "புதுமை ஒளி", என்ற சஞ்சிகையும் மாதாந்தம் வெளி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வந்து கொண்டிருந்தது. அதன் ஆசிரியராக இணைந்து செயற்பட்ட மறைந்த ஆசிரியர் இரா நாகராசன், இரா வினாயகமூர்த்தி ஆகியோருடன் இணைந்து அப்போது அன்பு ஜவஹர்ஷா "தமிழ்ச்சுடர்" என்ற சஞ்சிகையை வெளியிட்டார். அக்காலப்பகுதியில் பேனா மனோகரன் "கலைமதி" என்ற இதழையும், மறைந்த சட்டத்தரணி எஸ்.எச்.எம். சஹீர் "வீரத்தமிழன்" என்ற சஞ்சிகையையும், எஸ். சேவியர் குலாஸ் என்பவர் "அன்பன்" என்ற இதழையும் வெளியிட்டதுடன், மாணவர் ஆக்கங்களுக்காக "பெட்டகம்" என்ற இதழும் வெளிவந்து கொண்டிருந்தன. இவ்விதழ்களில் பலவற்றில் பங்களித்துள்ள இளைஞனாக அன்பு ஜவஹர்ஷா தனது இலக்கியப் பயணத்தை மேற்கொண்டு வந்தார்.

இதன் தொடர்ச்சியாக 1970களில் அநுராதபுரம் களைச் சங்கத்தை நிறுவி பல்வேறு கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்தார். இதன் விளைவாக "களம்" என்ற மும்மாத இதழ் வெளிவந்ததுடன், கவியரங்கம், கலையரங்கம், விமர்சன அரங்கம் நூல் வெளியீடுகள் என்று பல கலை இலக்கியச் செயற்பாடுகள் நடந்தேறின. இவற்றினை இணைச் செயலாளராக நின்று ஒப்பேற்றினார்.

1970களில் எழுந்த புதுக்கவிதை கலாசாரம், அநுராதபுரத்தில் பாரியதொரு இலக்கியப் பரிவர்த்தனையை நிறுவிச்சென்றது. இதன் பேராக தமிழகத்தின் பாடிச்சேரியில் வெளிவந்த "ஏன்" இதழின் இலங்கைக்கான மலரை பாலகிரியுடன் இணைந்து அன்பு ஜவஹர்ஷா தொகுத்தார்.

1971இல் ஆசிரிய நியமனம் பெற்றுக் கொண்ட அன்பு ஜவஹர்ஷா பலாலி ஆசிரிய கலாசாலையில் நுழைந்தன் பின்னர் தனது இலக்கிய நட்பு வட்டாரத்தை மேலும் வகுத்துக் கொண்டு பயணிக்கத் தொடங்கினார். அங்கு திக்குவல்லைக் கமால், ஜவாத்மரைக்கார், கலைவாதிக் கலீல், மூதூர் மொஹிதீன் மற்றும் பிரபல ஓவியர் ரமணி அவர்களுடனான நட்பும் கலாசாலை வாழ்வும் தனது இலக்கியப்பணத்தின் இன்னொரு மைல்கல்லாக குறிப்பிடுகின்றார், அன்பு ஜவஹர்ஷா.

**இலக்கிய வெளியீடுகள்**

இலங்கையின் புதுக்கவிதை முயற்சிகள் பரிமாணங்கொண்டு விசாலிக்கத் தொடங்கிய காலப் பகுதியில் இலங்கையின் முதன்முதலாக கவியரங்கின் போது கவியரங்குக் கவிதைகளை தொகுப்பாக வெளியிடும் முயற்சியாக அன்பு ஜவஹர்ஷா "சிதைந்து போகும் சிறப்புக்கள்" என்ற தொகுதியையும் பேனா மனோகரனுடன் இணைந்து "புத்துலகம் படைப்போம்" என்ற தொகுதியையும் 1973ஆம் ஆண்டு வெளியிட்டார். இவரது முதலாவது தொகுதியாக "காவிகளும் ஒட்டுண்ணிகளும்" என்ற புதுக்கவிதைத் தொகுதி 1975ஆம் ஆண்டு வெளிவந்தது. இத்தொகுதி சமகால சமூக அரசியல் பிரதிபலிப்புகளாக இருந்ததுடன், இன்றும் சமவுடமை வாதத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் ஒரு கவிதைத் தொகுதியாக இருக்கின்றது.


அத்துடன் இலங்கையில் பலபாகங்களில் வசிக்கும் 44 புதுக்கவிதையாளர்களின் கவிதைகளைத் தொகுத்து "பொறிகள்" என்ற பெயரில் வெளியிட்டார். இதுவும் இலங்கை புதுக்கவிதை வரலாற்றில் முதன் முயற்சியாகும். அத்துடன் இன்று தமிழகத்தில் வசிக்கும் அநுராதபுரத்துக்கவிஞர் பேனா மனோகரனின் கன்னிக் கவிதைத் தொகுதியான சுமைகள் தொகுதியை வெளியிடுவதில் பிரதான பங்காற்றினார். இவரது கலை இலக்கிய சமூக நினைவுகளை "அழியாத கோலங்கள்" என்ற பெயரில் தொடர்ச்சியாக முகநூல் ஊடாக பதிவேற்றி உள்ளதுடன், அதனை ஒரு கையடக்க தொலைபேசிகளுக்கான மென்பொருள் ஒன்றாக மாற்றியிருக்கின்றமை ஒரு புதுமையான முயற்சியாகும். இது நூலாக வெளிவரவேண்டும் என்பது எனது தனிப்பட்ட கோரிக்கையாகும். ஆசிரியர் சேவைகள் தொடர்பாக "இலங்கை ஆசிரியர் சேவை விதிக்கோவையும், இலங்கை ஆசிரியர் சேவை" ஆகிய இரண்டு நூல் களையும் எழுதியுள்ளார்.

1960 1970 காலகட்டத்தில் அநுராதபுரம் பிரதேச கையெழுத்து இதழ்களின் பயணத்தில் தமிழ்வேந்தன் என்ற புனைப்பெயரில் இவரது பயணம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













புத்தொளி, முத்தொளியாகி தமிழ் வேந்தன் என்ற பெயரில் பின்னர் அச்சேரியது.

**ஏனைய இலக்கிய முயற்சிகள்**

மன்னார் தாராபுரம் அல் மினா பாடசாலையிலிருந்து "மினா" என்ற சஞ்சிகையையும், அநுராதபுரம் ஸாஹிராவிலிருந்து "பிறையொளி" என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு மாணவர் எழுத்து முயற்சிகளுக்கு கால்கோலிட்டார். அதிபர் தொழிலில் இருந்து விடுகை பெற்றதும், அநுராதபுரம் ஸாஹிரா பாடசாலைச் சமூகம் "பிறையொளி அன்பு ஜவஹர்ஷா சிறப்பு மலரை வெளியிட்டு பெருமை சேர்த்துக் கொண்டது. அநுராதபுரம் சாஹிராவின் பொன்விழா மலரையும் வெளியீடு செய்வதில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

ஆவணங்களை மிக நுட்பமாக கையாளும் இவர், அநுராதபுர பிரதேச சிறுபான்மை மக்களது பூர்வீக வரலாற்று ஆவண நூல் ஒன்றை அல்ஹாஜ் எஸ்.எச். முத்தலிப் அவர்களின் துணைகொண்டு "முதுசொம்" என்ற பெயரில் ஆய்வு நூலைத் தொகுத்து வெளியிட்டார். இந்நூல் ஒரு முக்கிய ஆவணமாகும். சிறுபான்மை சமூகங்களின் வரலாற்றை இதுவரை யாரும் இத்துணை ஆதரங்களுடன் பேசவில்லை என்ற எல்லாரது கணிப்பையும் தொடும் அளவுக்கு மிக அரிதான புகைப்படங்கள், ஆவணங்கள், தகவல்கள் என்பனவற்றைச் சுமந்த வெளியீடாகும். இவ்வாவணங்கள் எவ்வாறு சேர்க்கப்பட்டன என்று நாம் புருவங்களை உயர்த்தும் அளவுக்கு உண்மைத் தன்மையுடன் இந்நூல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நூல் இப்பிரதேச சிறுபான்மை மக்களுக்கு மிக முக்கியமானதாகும்.

தவிரவும் தமிழ், சிங்கள நாளேடுகளிலும் பல்வேறு புனைபெயர்களில் ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். "நான் + நீ = நினைவுகள்" எனும் காவியத்தை தினகரன் இதயராகம் பகுதியில் தொடராக எழுதி வந்தார். முற்போக்கு எழுத்தாளர் சங்க பண்டார நாயக்க மகாநாட்டில் "கடந்த இருபது வருடகால புதுக்கவிதை வளர்ச்சி" எனும் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார்.

அநுராதபுரத்தில் 2000ஆம் ஆண்டுகளின் பின் செய்யப்பட்ட எல்லா இலக்கிய முயற்சிகளிலும் முக்கிய தூணாக நின்று, போசகராக செயற்பட்டு வந்துள்ளார். இதன் பேறாக வெளிவந்த நின்ற அநுராதபுரி கலை இலக்கிய வட்ட வெளியீடான "அநுராகம்" சஞ்சிகையினதும் தொடர்ச்சியாக வெளிவரும் அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழு வெளியீடான படிகள் சஞ்சிகையினதும் போசகராக செயற்பட்டு வருகின்றார். மல்லிகை அநுராதபுரப் பிரதேச சிறப்பு இதழை வெளியிடுவதிலும் பெரும் பங்காற்றியதுடன், மல்லிகை, ஞானம் போன்ற இதழ்களை இப்பிரதேசத்து இளம் எழுத்தாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். 1990களில் வடக்கில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் வழியே தனது இலக்கிய ஆவணங்களை இழந்துள்ள துரதிஷ்டம் இவருக்குண்டு.

படிகள் சஞ்சிகையின் 05ஆவது ஆண்டுச் சிறப்பிதழில் அநுராதபுர பிரதேச கையெழுத்துச் சஞ்சிகைகள், என்ற கட்டுரையை எழுதியுள்ளதுடன், 10ஆண்டுச் சிறப்பிதழில் ஒரு நூற்றாண்டுகால பகுப்பிலிருந்து அநுராதபுர கலை இலக்கியப் பதிவுகள் என்ற கட்டுரையையும் எழுதியுள்ளார். இதனால் இப்பிரதேச கலை இலக்கிய முயற்சிகளின் முக்கிய விடயங்களை ஆவணங்களாக தந்துள்ள பெருமை இவரையே சாரும். இது இந்தப்பிரதேச இலக்கியத்தின் வரலாற்றுப் பதிவாகிறது.

**கல்விப் பணிகள்**

உதவி ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து பாடசாலைகளுக்கு உச்ச அளவிலான சேவையை வழங்கியுள்ளார். தனது சொந்த நிதியை அதிகம் கிரயம் செய்து பாடசாலைக்கு வளங்களை அள்ளித்துதந்த அதிபர் பட்டியலில் முன்நிற்பவர் அன்பு ஜவஹர்ஷன என்பது யாவரும் அறிந்த உண்மையே. நிலவிலிருந்து நன்கொடை கிடைக்குமாயின் அதனைச் சென்று பெற்று பாடசாலைக்கு வழங்க வேண்டும் என்பது அவரது கனவாக இருக்கும். பாடசாலையை இரண்டாவது மனைவியாக திருமணம் முடித்தவர் போன்று சதா பாடசாலை வளாகத்திலே இருப்பார். தனது சுகயீனத்திற்கு செலவு செய்த பணத்தை பாடசாலை வளர்ச்சிக்கு செலவு செய்ய முடியாதுபோனதாக ஆதங்கப்படுபவர் யாராக இருப்பார். அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதிய நிதியை பாடசாலை அபிவிருத்திக்கும், மாணவர் அபிவிருத்திக்கும் செலவு செய்த பெருந்தகை இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை, பொது நிர்வாக சேவை உள்ளிட்ட பல்வேறு தொழில் சார் வழிகாட்டல்களையும் சுற்று நிருபங்கள், தாபன விதிகள் என்பனவற்றை ஆவணமாக பேணிப் பாதுகாத்து வருவதுடன், அதனை தேவைக்கேற்ப பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் வாயிலாக பதிவேற்றி தமிழ் மொழி மூல துறைசார் ஆவணக் காப்பாளராக இருப்பது இலக்கியப் பணிகளுக்கு அப்பால் மிக முக்கிய மானதாகும். இது இன்று ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களின் தொழிசார் பிரச்சினைகளுக்கு தீர்வு களாக இருப்பது கண்கூடு.

சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் வருகின்ற அரச தொழில் சார் ஆவணங்களையும் மொழிபெயர்த் துள்ளதுடன், தானாக தயாரிக்கின்ற சம்பள விபர முறைமைகளை சிங்களத்திலும் மொழிபெயர்த்து அரச காரியாலயங்களுக்கும், ஊழியர்களுக்கும் இலவசமாக விநியோகித்துள்ளார்.

2004ல் தரம் பெற்ற அதிபர் சேவைச் சங்கத்தின் அகில இலங்கைத் தலைவராக இருந்து செயற்பட்டு அச்சங்கத்திற்கு பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார். ஓய்வு பெற்றதன் பின்னர், ஆசிரியர், அதிபர் பயிற்சி யாளராகவும் வளவாளராகவும் இருந்து வருகின்றார். வடமத்திய மாகாண கல்வித் தரக் குழுவின் உறுப்பின ராகவும் கலாசாரக் குழு உறுப்பினராகவும் செயற் பட்டுள்ளார். அவ்வாறே அல் இஸ்லாஹ் என்ற முன் பள்ளி ஒன்றையும் முன்னின்று செயற்படுத்தி வருகின்றார்.

ஆசிரியம், அகரம் போன்ற கல்வியியல் சஞ்சிகைகளின் ஆலோசனைக்குழு உறுப்பினராக செயற்பட்டு, கல்வித்துறை ஆக்கங்கள் பலவற்றை எழுதி யுள்ளார்.

தொடர்ந்து கல்வித்துறைசார் ஆவணங்களை யும் சம்பளம், படிகள் பற்றிய விடயங்களில் முழுமை யான ஆவண கர்த்தாவாக தொழிற்படுகின்றார்.

**கிடைத்த கௌரவங்கள்**

ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன்னர், இலங்கை அரசின் கலாபூஷண விருதைப் பெற்றுள்ள துடன், 2015ம் ஆண்டு வடமத்திய மாகாண கலாசார திணைக்களத்தின் கலாசூரி விருதையும் பெற்றுள்ளார். தவிரவும் பெரும்பான்மை அதிபர்களுடன் போட்டியிட்டு சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்.

2002ல் உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டள்ளார். படிகள் சஞ்சிகையின் வருடாந்த கௌரவிப்பிலும் கௌரவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2000ஆம் ஆண்டு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அப்போது நீதி அமைச்சராக இருந்த பேரா சிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களிடமிருந்து அகில இலங்கை சமாதான நீதவான் என்ற கௌரவத்தைப் பெற்றுக்கொண்டார்.

2007ஆம் ஆண்டு அநுராதபுர ஐக்கிய வர்த்தக சங்கத்தால் இராசரட்டை சுவர்ண சேவா பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட மூவரில் இவரும் ஒருவராவார். ஏனைய இருவரும் சகோதர மொழியைச் சேர்ந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

மல்லிகை, ஞானம், அநுராகம், படிகள், அல் மதீனா, பிறையொளி ஆகிய இதழ்கள் இவரை அட்டைப்படமாக வெளியிட்டு கௌரவப்படுத்தி யுள்ளன. அத்தோடு ஜீவநதி இலக்கியச் சிறப்பிதழை வெளியிட்டு மேலும் ஒரு படி சென்று இவரை கௌரவப்படுத்துவது மகிழ்ச்சியளிக்கின்றது.

அரசியல் கௌரவங்களுக்கும், விண்ணப்பித்த பட்டங்களுக்கும் என்றும் ஆட்படாத அன்பு ஜவஹர்ஷா தனக்கான தனிப்பாதையை வகுத்துச் செயற் பட்டுள்ளமை முன்னுதாரண வரலாறாகின்றது.

**முடிவுரையாக**

எதையும் சிதைக்காமல் அழகாக செப்பமாக செய்வதுடன் அதன் வினைத்திறனை மக்கள் மயப் படுத்துவதிலும் ஆர்வமாக இருப்பதுடன், அநுராதபுர மாவட்ட தமிழ் கலை இலக்கிய நூற்றாண்டு வரலாற்றை எழுதி படிகள் 10ஆவது ஆண்டு மலரில் ஆவண மாக்கியுள்ளமை இவர் எமக்குள்ள முன்னுதாரணமாக இருக்கின்றார்.

1965ஆம் ஆண்டு முதல் எழுத்துத் துறையில் ஈடுபட்டு இன்று இத்துறையில் இருபது ஆண்டுகளை நெருங்கிக் கொண்டு இருக்கையில் அன்பு ஜவஹர்ஷா தொடர்ந்து ஆக்க இலக்கியத் துறையில் நிறைய ஆக்கங்களை வெளியிடாமைக்குக் காரணம், இவர் தனது முத்திரையைப் பதிப்பதை விடவும் கூட்டு முயற்சியில் ஒன்றிணைந்து அமைப்புக்களோடு அனுசரணையாக தன்னுடன் பயணிப்பவர்களை வளர்த்து விடும் விசேட பண்பைக் கொண்டிருப்பதாகும்.

அநுராதபுர மாவட்டத்தில் நடக்கின்ற கல்வி, கலை இலக்கிய முயற்சிகளின் முதுசொமாக இருப்ப துடன், இவருக்காக பேனா மனோகரன், கெகிராவ சஹானா, கெகிராவ சுலைஹா, வஸீம் அக்ரம் உள்ளிட்ட வர்களின் நூல்கள் சமர்ப்பணமாக்கப் பட்டுள்ளன.

இது இவ்விலக்கியப் பிதாமகனின் இலக்கியப் பங்களிப்பை முகஸ்துதியின்றி முன்னிறுத்தும் முக்கிய உசாத்துணைகளாகின்றன.

இன்று படிகள் சஞ்சிகை தொடர்ச்சியாக 18 ஆண்டுகளுக்கு மேல் வெளிவருகின்றது எனின் அதற்கு அத்திபாரமாக பின்னிற்பவர் இந்த அன்பு ஜவஹர்ஷா தான் என்ற பெருமையுடன், இவர்காலத்தில் வாழ்ந்த இலக்கிய நெஞ்சங்கள் என்ற வகையில் இன்று நாம் பேருவகை அடைகிறோம்.

கல்விப் புலத்திலும், இலக்கியப் புலத்திலும் பாரிய இலக்கியப் பங்களிப்பைச் செய்துவிட்டு அமைதியாகவிருக்கும் கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா ஒரு சாதனையாளர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புஜவஹர்ஷா எனும் இலக்கிய ஏ(தோ)ணி

எனது முதலாவது பத்திரிகை ஆக்கம் 1992 ஆண்டு பன்முக ஆளுமை தேசத்தின் கண், தமிழ்மாமணி மானா மக்கீன் தினகரன் வாரமஞ்சரியில் தயாரித்த லைட்ரீடிங் பகுதியில் பிரசுரமானது. அன்றுதொடக்கம் பல்வேறு பத்திரிகைகளில் சின்னச்சின்ன குட்டிக்கவிதைகளை எழுதி வந்த எனக்கு 1997 களில் தினகரன் சனி இதழில் மறைந்த பன்முக எழுத்தாளர் எம்.எச்.எம். ஷம்ஸின் தயாரிப்பில் வெளிவந்த "புதுப்புனல்" புதிய பாதையை திறந்து தந்தது. புதுப்புனலின் மூலம் எம்.எச்.எம்.ஷம்ஸ் என்போன்ற பலரை பட்டை தீட்டினார்.

காலப்போக்கில் புதுப்புனலின் ஆஸ்தான எழுத்தாளர்களில் நானும் ஒருவனாகிப் போனேன். புதுப்புனலில் தீவிரமாக எழுத ஆரம்பித்து ஓராண்டுகள் கழிந்த நிலையில் 1998 களில் அன்பு ஜவஹர்ஷா அநுராதபுரத்தை சேர்ந்தவர் என்றும் அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றுகிறார் என்றும் அறிந்து கொண்டேன். இந்தவிடயத்தை எனக்கு சொன்னவர் எம்.எச்.எம்.ஷம்ஸ் ஆவார். அன்புஜவஹர்ஷா அநுராதபுரத்தில் வாழ்கிறார் என்றவிடயம் தெரிந்த பின்னர் மிகப்பெரும் எழுத்தாளுமையான அன்பு ஜவஹர்சாவை சந்திக்கும் ஆர்வம் எனக்குள் மெல்லவேரூண்டத்தொடங்கியது.

ஒருபாடசாலை நாள் காலை நாச்சியாதீவிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அநுராதபுரம் நோக்கி பயணப்படுகிறேன். ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் காரியாலயத்திற்க்கு அருகாமையில் தயங்கித்தயங்கி நிற்கிறேன். யாரோ ஒருவர் வந்த விடயம்பற்றி விசாரிக்க அன்பு ஜவஹர்ஷாவை சந்திக்க வேண்டும் என என்விபரத்தையும் சொன்னேன்.

சில நிமிடங்களில் என்னை அதிபர் காரியாலத்துக்குள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச்சென்றார் அந்த நபர்.

அங்கே ஆஜானபாகுவான ஒரு மனிதர் வெள்ளை உடையில் அமர்ந்திருந்தார். என்னைக் கண்டவுடன் புன்னகையோடு வரவேற்று அமரச் சொன்னார். தீவிர வாசகனாக அன்பு ஜவஹர்ஷா எனது பெயரை அறிந்து வைத்திருந்தார். அன்றைய முதல் நாள் சந்திப்பு அரை நூற்றாண்டுகள் கடந்தும் இன்று வரைக்கும் தொடர்கிறது. இறைவன் துணையால் இனியும் தொடரும்.

அன்பு ஜவஹர்ஷா என்ற இலக்கிய ஆளுமை யுடனான அறிமுகம் எனது இலக்கிய தொடர்பாடல் பரப்பை விசாலப்படுத்தியது. என்னையும் தேடல்மிக்க தேர்ந்த வாசகனாக உருவாக்கிக்கொள்ள உந்து சக்தி யாக அமைந்தது எனலாம்.

*1999* களில் அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தின் தோற்றம் கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா வின் ஆதரவுடன் உதயமாகியது. இதன்மூலம் எப்போதும் இலக்கியம் பேசுவதும் இலக்கியம் சார் பயணங்கள் மேற்கொள்வதும் வாடிக்கையானது. எந்தத் தேவைக்காக அநுராதபுரம் சென்றாலும் இயலுமான நேரங்களில் அன்பு ஜவஹர்ஷாவை சந்திப்பதும் இலக்கியம் தொடர்பிலான விடயங்களை பகிர்ந்து கொள்வதும் என்று நாட்கள் கடந்தன.

அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தின் தீவிர மான இயக்கத்திற்கும், இலக்கிய செயற்பாட்டிற்கும் அன்பு ஜவஹர்சாவின் பங்களிப்பும் வழிகாட்டலும், பொருளாதார பங்களிப்பும் பேருதவியாய் அமைந்த தோடு எம்மை வேகமாக இயங்க வைத்தது.

கலை இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளுக்கு கெகிராவ ஸஹானா, சாஜஹான், அநுராதபுரத்தைச் சேர்ந்த எப்.ராசிக் பரீட் (ஆசிரியர்), சப்ரினா (ஆசிரியர்), ரஹ்மதுல்லாஹ்(ஆசிரியர்), முபாரக்தீன், பாத்திமா பேகம்(ஆசிரியர்), கஹடகஸ்திகிலிய அன்சார், சுபஹான், யாழ் ஜன்சி கபூர் (அதிபர்), நாச்சியாதீவை சேர்ந்த ஸாஹிரா சரீப்தீன் (ஆசிரியர்), அன்பு அமீன், சலீமா சுப்ஹானியா, எம்.சஹ்ரின் அஹமட் (பொறியிய லாளர்), பஹ்மியா (ஆசிரியர்) கம்பிரிகஸ்வெவ. ரிஸ்வான், நிஸ்ரின் (ஆசிரியர்), கலாநிதி எம்.சி. ரஸ்மின், நிபாசிர், இக்கிரிகொல்லாவ முஸம்மில் என பலர் இணைந்து காத்திரமான இலக்கியச் செயற்பாடுகளை செய்து வந்தோம். இவைகளின் பின்னணியில் அன்பு ஜவஹர்ஷா மாபெரும் இலக்கிய விருட்சம் எமக்கு நிழ லாகவும், உறுதுணையாகவும் இருந்து செயற்பட்டார்.

அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தினூடாக அநுராகம் எனும் கலை இலக்கிய காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டோம். அநுராகம் தொடர்ச்சி யாக ஆறு சஞ்சிகைகள் வெளிவந்தன, அத்தோடு சிரேஷ்ட இலக்கிய வாதிகளான திக்குவல்லை கமால், ஜவாத் மரைக்கார், மேமன்கவி, கெகிராவை ஸஹானா ஆகியோரின் இலக்கிய ரீதியிலான அனுபவப் பகிர்வு மற்றும் பன்முக எழுத்தாளர் தமிழ்மாமணி அஸ்ரப் சிஹாப்தீன் வெளியிட்ட கவிதைகளுக்கான காத்திரமான இதழான யாத்ராவின் அறிமுக விழா போன்றவற்றை ஏற்பாடு செய்து தமிழ் இலக்கியப் பரப்பின் சாளரத்தை எமக்கு திறந்து நுகரவைத்தார் கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா. யாத்ராவின் அறிமுக நிகழ்வின் போது சிரேஷ்ட ஒலி ஒளிபரப்பாளர் அஹமட் முனவ்வர், சந்தக்கவி அமீர் அலி ஆகியோரை சந்திக்கின்ற வாய்ப்பும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தி னால் *2011* இல் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் அநுராதபுரம் சார்பாக அன்பு ஜவஹர்சாவும் நானும் கலந்து கொண்டோம். வேறு யாராவது அநுராதபுரத்திலிருந்து கலந்து கொண்டார் களா என்று எனக்கு ஞாபகமில்லை. மூன்று நாட்கள் நடைபெற்ற அந்த நிகழ்வில் நாங்கள் முழுமையாக பங்கேற்றோம். எமது இரவுத்தங்குமிடம் மருதானை மாளிகாகந்தை வீதியில் அமைந்திருந்த எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்கள் தங்கியிருந்த அந்த சின்ன அறையாகும். ஷம்ஸ் அவர்கள் அதே காலப்பகுதியில் காலமாகியிருந்தார் எனவே அந்த அறையில் ஷம்ஸ் அவர்களின் மகனான ஊடகவியலாளர் எஸ்.எம்.பாஹிம் மற்றும் இப்போது சூரியன் வானொலியில் உயர்பதவி வகிக்கும் அஸ்ரப் அமீர் ஆகியோர் தங்கியிருந்தனர். எம்மோடு இலக்கிய ஜாம்பாவான்களான கலைவாதி கலீல், திக்குவல்லை கமால், ஜவாத் மரைக்கார், அல் அஸூமத் போன்றோர் அதே குருவிக்கூட்டில் தங்கினர்.


அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தின் அனுசரனையில் எனது முதலாவது கவிதைத்தொகுதி யான "சிரட்டையும் மண்ணும்", கெகிராவை ஸஹானா வின் கவிதைத்தொகுதியான "இன்றைய வண்ணத்தி பூச்சிகள்" ப.ஆப்தீனின் கருக்கொண்ட மேகங்கள், ஆகியனவற்றுக்கான வெளியீட்டு, அறிமுக விழாக் களை செய்தோம்.

அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தின் நீட்சியாக எல்.வசீம் அக்ரம், பாத்திமா ஸர்மிலா, எம்.சி.நஜிமுதீன், அநுராதபுரம் ஸமான் ஆகியோர் ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் அன்பு ஜவர்ஹர்ஷாவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை யோடு அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய வட்டத்தை உருவாக்கி காலாண்டு இதழாக இன்றுவரை வெளிவரும் "படிகள்" இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டனர். படிகள் சஞ்சிகையானது சிரமத்தின் மத்தழியில் எல்.வசீம் அக்ரமின் தனிமனித முயற்சியினால் இன்று மட்டுக்கும் வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

*1970* களின் பிற்பாடு இலங்கையில் புத்தெழுச்சி பெற்ற புதுக்கவிதை வடிவத்தின் முன்னோடிகளில் அன்பு ஜவஹர்ஷாவும் முதன்மையானவர். அன்பு ஜவஹர்ஷா சிறப்பு இதழ் தொடர்பில் ஜீவநதியின் ஜீவநாடி பரணீதரனுடன் உரையாடிய பின்னர் தமிழகக் கவிஞர் மு.மேத்தாவுடன் பேசினேன். அவரது ஞாபகத்தில் இன்னும் அன்பு ஜவஹர்ஷா ஒளிர்ந்து கொண்டு இருக்கிறார். வானம்பாடிக் கவிஞர்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதன் பயனாக புதிய உத்வேகத்துடன் கிளர்தெழுந்த புதுக்கவிதை அல்லது நவீன கவிதை யின் சடுதியான மாற்றத்தையும் அவர் விவரித்தார். அவர் பேசிவிட்டு தொலைபேசியை வைத்த பின்னர் தான் அவரிடமும் அன்பு ஜவஹர்ஷா தொடர்பில் ஒரு கட்டுரையை பெற்றிருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றியது. அதன் பிறகு இந்தக் கட்டுரை எழுதும் இறுதி நேரம் வரைக்கும் அவ்வெண்ணம் மறந்தே போயிருந்தது.

காலமாற்றத்தில் புதுக் கவிதையின் முன்னோடிகளில் ஒருவரான கலாபூசணம் அன்பு ஜவஹர்சா இலக்கியத் தளத்திலிருந்து கல்விப்புலத்தை நோக்கி தனது அவதானத்தை வெகுவாக மாற்றிக்கொண்டார். எனது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் இலங்கையில் ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் அதிக கட்டுரைகள் எழுதிய ஒரே ஒருவர் என்றால் அது அன்பு ஜவஹர்ஷா தான். அவரது இந்த புலமையை இலங்கைக் கல்விச் சமூகம் சரியாக பயன்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயம். கல்வி அமைச்சின் ஆலோசகர் சபையில் இருக்கவேண்டியவர் அன்பு ஜவஹர்ஷா. ஆனால் யாருக்கும் வளைந்து கொடுக்காத நியாயத்திற்காக மட்டுமே போராடும் போராட்ட குணமுள்ள, ஜால்ரா அடித்து பதவியை பெற்றுக் கொள்ள முனையாத அன்பு ஜவஹர்ஷா போன்றவர்களுக்கு இவ்வாறான பதவிகள் முயற்கொம்பாகும்.

இன்று வரைக்கும் எழுத்திலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி மங்காத மாணிக்கமாக வாழ்ந்து வரும் அன்பு ஜவஹர்ஷாவை என் தந்தைக்கு அடுத்த இடத்தில் வைத்து நான் மதிக்கவும் நேசிக்கவும் காரணம் அவரது பணிவும், தன்னடக்கவும், எல்லோருடனும் நட்பாகப் பழகும் உயர்ந்த குணமும்தான், இளம் எழுத்தாளர்களை ஏற்றிவிடும் ஏணியாக இருப்பதே காரணமாகும்.

இலங்கை கல்விச் சமூகம் அன்பு ஜவஹர்சா எனும் புலமையாளனை பயன்படுத்திக்கொள்ள தவறியுள்ள அதே நேரம் தமிழ் இலக்கிய உலகமும் அவரை சரியாக பயன்படுத்தவில்லை என்பது எனது தனிப்பட்ட கணிப்பாகும். பேருக்கும் புகழுக்கும், ஆளையாள் வெட்டிக்கொத்தி புழுங்கி வடிகின்ற சீரற்ற மனநிலைகொண்ட மந்தபுத்தியுள்ள தமிழ் இலக்கிய உலகில் எதையும் அலட்டிக்கொள்ளாமல் அமைதியாக ஓடும் நதியாக இயங்கிக்கொண்டிருக்கிறார் அநுராதபுரத்தின் இலக்கிய முதுசம் அன்பு ஜவஹர்ஷா.

இவரது இலக்கியச் செயற்பாட்டை கௌரவித்து இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் 2011 இல் நடாத்திய சர்வதேச இஸ்லாமிய தமிழ் மாநாட்டில் இவரை கௌரவித்தது. அவ்வாறே வட மத்திய மாகாணத்தின் கலாசார அமைச்சின் கௌரவம், இலங்கை சிங்கள கவிஞர்கள் சங்கத்தின் கௌரவம் என பல கௌரவங்களை பெற்றுள்ளார்.

இவரது கல்விப்புலமைக்கு சான்றாக பெரும்பான்மை சமூகத்தினர் அதிகம் அங்கம் வகிக்கும் அகில இலங்கை அதிபர் சங்கத்தின் தலைவராக இதுவரை தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ் தலைவர் இவர் மட்டுமே. அன்பு ஜவஹஉஷாவுக்கு முன்னரோ அல்லது அதன் பின்னரோ இதுகால வரைக்கும் அகில இலங்கை அதிபர் சங்கத்தின் தலைவராக ஒரு சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதிப் படுத்தும் யாரும் தெரிவு செய்யப்படவில்லை என்பது இந்த இடத்தில் பதியப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். எதிர்காலத்தில் இது சாத்தியப்பட பிரார்த்திப்போம்.

இலக்கியத்திலும் சரி கல்விச்சேவையிலும் சரி பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா ஆற்றிய இத்துணை பங்களிப்புக்கும் பக்கபலமாக இருந்து உற்சாகம் வழங்கிய அவரின் அன்பு மனைவி ஜான் பீவி அம்மையாரின் புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும், ஒத்துழைப்பும் அவரின் ஏற்ற இறக்கங்களில் ஆறுதலாக இருந்து அவரை ஆற்றுப்படுத்திய பெருந்தன்மை போற்றுதலுக்குறியதே!

அன்பு ஜவஹர்சாவின் ஓய்வின்றிய இந்த ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து அவரது எல்லாச் செயற்பாடுகளுக்கும் மனம் கோணாமல் ஒத்துழைப்புட நல்கிவரும் அம்மையாருக்கு இறைவன் நல்லருள் புரிவானாக. எமது அநுராதபுர மாவட்டத்தின் முதுசமான கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கு எல்லோ ருக்கும் பொதுவான இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டுமென பிரார்த்தனை செய்வ தோடு இந்த சிறப்பிதழை வெளியிடும் ஜீவநதிக்கும் அதன் நிறுவனர் க.பரணீதரனுக்கும் இதயத்து நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியாகும் விதி



அந்தவயலை,
ஆயிரம் கரங்கள்!
சேர்ந்தே உழுதன.

வலு அற்றிருந்தும்,
பிச்சைப் பணத்திலே!
பசளையும் விழுந்தது.

கலப்பு விதைகளில்!...
தூயதைத் தேடி-
ஆழமாய் நட்டன.

வரண்டகைகளே!
பாத்தி கோலி
குடிநீரைக்கூட!..
பாசனம் செய்தன.

கொடும் வெயிலிலும்!
உரமாய் முளைத்த,
அந்தச் செடிகள்..
நம்பிக்கை தந்தன.

கொத்திகள் விரட்டி...
போலிகள் நட்டு
பரண்கள் மேல் -
காவல் நடந்தது.

அடிக்கடி கேட்ட
யானை உறுமலும்,
சகலதும் பொறுத்து
எதிர்ப்பார்பு கூடின

அசுர உழைப்பால்!
செழித்தசெடிகள்
வசந்தம் காட்டின
பயத்தைக் கூட்டின

பாடுபட்ட கரங்கள்..
பயனைப்பெற,
அரிவாள் தூக்க
நேரம் பார்த்தன.

ஒதுங்கி இருந்து-
ஒத்திகை பார்த்த!
ஓரிரண்டு
காலம் வந்ததை..
கண்டு கொண்டு!
கத்தி தேடின.

கரங்களின் கூட்டத்தில்
சேராத இவைகள்!
அறுவடைக்குமட்டுமே!
அருகதையாகுமா?

அறுவடையின் போது
அறுக்கப்பட்டு
அரியணைத் தேரில்
நசுக்கப்படுவதே விதி


நன்றி : மல்லிகை
1981 ஏப்பிரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

அன்பு ஜவஹர்ஷா
சந்திப்பு - நாச்சியாதீவு பர்வீன்



தமிழ் இலக்கிய பரப்பில் மிகவும் அறியப்பட்டவர் கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா- தந்தை எழுத்தாளர் அதிபர் அன்பு தாசனின் அருட்டலினால் சிறுபராயத்திலேயே எழுத்துத் துறைக்குள் நுழைந்தவர். ஆசிரியராக, அதிபராக நீண்ட காலம் பணியாற்றிய கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா அநுராதபுர மாவட்டத்தின் இலக்கிய முதுசமாக கருதப்படுகிறார். இளைய பரம்பரை எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வழிகாட்டி சிறந்த படைப்பிலக்கியவாதிகளை அநுராதபுர மாவட்டத்தில் உருவாக்குவதில் வழிகாட்டியாக செயற்படுகிறார். ஆசிரிய சம்பள முரண்பாடுகள் தொடர்பில் சுமார் மூன்று தசாப்தத்திற்கும் அதிகமான காலங்கள் எழுதிவரும் அன்பு ஜவஹர்ஷா இன்னும் எழுதிக்கொண்டே இருக்கிறார் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

**நாச்சியாதீவு பர்வீன்**

அன்பு ஜவஹர்ஷா என்ற பெயர் 1970 களின் பின்னர் தமிழ் இலக்கிய புலத்தில் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வெகுவாக அறியப்பட்ட பெயராகும். உங்களது இலக்கிய படைப்புக்களின் உற்பத்திப்புள்ளி அல்லது ஆரம்பம் எங்கிருந்து தொடங்கியது?

**அன்பு ஜவஹர்ஷா**

*1965*ம் ஆண்டு முதல் அக்காலத்தில் இன்றைய தொழில்நுட்ப சாதனங்களோ அச்சுக்கலையோ இல்லாத சந்தர்ப்பத்தில் பாடசாலை சஞ்சிகைகளே இலக்கியக் களமாக இருந்தது. தினபதி நிருபராகக் கடமையாற்றியபோது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அநுராதபுரத்தில் தொழில் செய்த நல்ல ரெத்தினம் என்ற நண்பர் தினபதி வாசகர். அவரின் அறிமுகத் தால் தீபம், கலைமகள் சஞ்சிகைகள் வாசிப்பும் ஜெயகாந்தன், லா.ச.ரா, பார்த்தசாரதி, மௌனி சுந்தர ராமசாமி போன்றவர்களால் நூல் வாசிப்பும் கிடைத்தது. கையெழுத்து சஞ்சிகையில் இருந்து சற்று மீண்டும் மேற்படி எழுத்தாளர்களின் தாக்கத்தால் காத்திரமான ஆக்க இலக்கியத்தின்பால் நாங்கள் சொல்லும் உற்பத்தி புள்ளி ஆரம்பமானது.

**நாச்சியாதீவு பர்வீன்**

புதுக்கவிதை முன்னோடிகளில் இலங்கையில் நீங்களும் ஒருவர். மரபுக்கவிதை கோலோச்சிய காலத்தில் புதுக் கவிதையின் வரவு இலக்கிய உலகில் எவ்வாறு பார்க்கப் பட்டது?

**அன்பு ஜவஹர்ஷா**

*1973* ஆம் ஆண்டு முதல் பலாலி ஆசிரியர் கலா சாலையில் நண்பர் திக்குவல்லை கமாலின் நட்பால் புதுக்கவிதை துறையில் ஆர்வம் உண்டானது. அவரது “எலிக்கூடு” புதுக்கவிதை நூலே இத்துறையில் ஆர்வத்தை உண்டாக்கியது. இலங்கையில் புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவர் என்ற பதம் பொருந்தாது. ஆனால் *1973* ஆம் ஆண்டு முதல் இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட முடிந்தது. இக்கால கட்டத்தில் மரபுக்கவிதை புதுக்கவிதை போராட்டம் இருந்தது. அப்போது இருந்த முற்போக்கு அரசியல் சிந்தனையாளர்களின் பின்னால் இளைஞர்கள் அணிதிரண்டமையால் தமிழ் கவிதை வரலாற்றில் இவ்வடிவம் கணிசமான தாக்கத்தை உண்டாக்கியதோடு பிற்காலத்தில் புதுக்கவிதையே கோலாகக் காரணமாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியாதீவு பர்வீன்

தென்னிந்திய தமிழ் எழுத்தாளர்களுடன் உங்களுக்கு நெருங்கிய நட்பு இருந்ததாக அறிகிறோம் அது பற்றி கூறமுடியுமா?

அன்பு ஜவஹர்ஷா

*1973*ஆம் ஆண்டு முதல் குடியரசு, முத்துப் பொருள் எடை பொ. துரையரசன் போன்ற தமிழக இலக்கிய நண்பர்களில் தொடர்பால் மேலும் பல இலக்கிய நண்பர்களின் தமிழகத்தில் தொடர்பு சீனச்சார்பு நூல்கள் சோசலிச நூலாக இருந்தபடியால் இலங்கையில் அவை தாராளமாகக் கிடைத்த படியால் நூல் பரிமாற்றம் செய்யக்கூடியதாக இருந்தது. கவிஞர் மு.மேத்தா வின் "கண்ணீர் பூக்கள்" என்மூலமே இலங்கையில் பலருக்கு கிடைத்தது. வானம்பாடி, வேள்வி, ஏன், விவேகசித்தன் உட்பட பல கவிதை இதழ்களை தமிழகத்தில் இருந்து பெற்று இலவசமாக இங்குள்ள இலக்கிய நண்பர்களுக்கும் வழங்கி வந்தேன். *1974*ஆம் ஆண்டு தமிழகப் பயணம் அக்கினி புத்திரன் ஞானி போன்ற வானம்பாடிக் குழுவின ருடன் நட்பை வலுப்படுத்தியது. கோவை பல் கலைக்கழகத்தில் அப்போது அவர்கள் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிறையத் தொடர்புகளை உண்டாக்கியது தமிழக நூல்களை இங்கு பெறுவது கஷ்டமாக இருந்தது போல மல்லிகை குமரன் போன்ற சஞ்சிகைகளையும் பேராசிரியர் கைலாச பதி போன்றவர்களின் நூல்களை அவர்கள் பெறுவது கஷ்டமாக இருந்தது. சிறு அளவிலாவது இந்த பரிமாற்றத்தில் எனது பங்களிப்பும் இருந்தது.

நாச்சியாதீவு பர்வீன்

1970 களில் வானம்பாடிகளின் ஆதிக்கம் கவிதையுலகில் வெகுவாக இருந்தது அந்த குழுமத்தின் நீங்களும் ஒருவர் என்ற வகையில் வானம்பாடிகளுடனான உறவு பற்றி கூறமுடியுமா?

அன்பு ஜவஹர்ஷா

நவீன கவிதை வரலாற்றில் வானம்பாடி காலக் கட்டம் முக்கியமானது; "மணிக்கொடி எழுத் தாளர்கள்" என்று பேசப்பட்டது போல வானம் பாடிக்கவிஞர்களும் முத்திரை பதித்து இருந் தார்கள். புதுக்கவிதை வரலாற்றில் வானம் பாடி குழு ஒரு மைல்கல்லாகும். தமிழக கவிஞர்களே அக்குழுமத்தில் இருந்தார்கள். இலங்கைக் கவிஞர்கள் வாசகராகவும் அதில் எழுதுபவர் களாகவும் மட்டுமே இருந்தார்கள். சித்தாந்த வேறுபாடு காரணமாக இந்த வானம்பாடி குழுவில் பிரிவு வரும் வரை நவீன கவிதை வரலாற்றில் இதன் தாக்கம் கணிசமாக இருந்தது. மு.மேத்தா, அக்கினி புத்திரன், ஞானி உட்பட பலருடன் தொடர்பும் இருந்தது.

நாச்சியாதீவு பர்வீன்

ஆரம்பத்தில் காத்திரமான எழுச்சிக்கவிதைகளை தந்த நீங்கள் தற்போது கவிதைத் துறையை விட்டு விலகிப்போய் விட்டதாக ஒருகுற்றச்சாட்டு நிலவுகின்றதே அந்த குற்றச் சாட்டினை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

அன்பு ஜவஹர்ஷா

ஆரம்பகால எழுத்துருவம் - கல்கண்டு ஆசிரியர் தமிழ் வானிலை தாக்கத்தால் கையெழுத்துச் சஞ்சிகைக்காக துப்ப நானும் கதைகளை எழுதுவதா கவே இருந்தது. ராதா, மித்திரன், மலர் போன்ற சஞ்சிகைகள், பத்திரிகைகளில் எனது ஆரம்ப கால சிறுகதைகள் வெளியாகி இருந்தன. புதுக்கவிதை என்ற வடிவம் அறியப்படாத போது எதுகை மோனை என்பது மட்டுமே மரபுக் கவிதைகளின் அத்திபாரம் என்ற அடிப்படையில் பல கவிதை களையும் எழுதி உள்ளேன். காத்திரமாக எழுச்சிக் கவிதைகள் என்று சொல்ல முடியாவிட்டாலும் நூற்றுக்கும் மேற்பட்ட முற்போக்கு சிந்தனை மிக்க புதுக்கவிதைகள் எழுதியுள்ளேன். இலங்கையில் உள்ளன, புதுக்கவிதையாளர்களின் கவிதைகளை "பொதிகள்" என்ற பெயரில் நூலாக்கியது இவ்வகையில் முதல் முயற்சியாக கொள்ளலாம்.

காலப்போக்கில் கவிதைத் துறையில் மட்டு மல்ல படைப்பிலக்கியத்துறையில் இருந்தும் சுய ஆக்கம் என்ற வகையில் பெரிதாக எதையும் செய்ய முடியவில்லை. ஆனால் பாடசாலை அமைப்புக் கள், இலக்கியத் தொடர்புகள் போன்றவற்றில் எனது ஈடுபாடு தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்த குற்றச்சாட்டை நான் மறுக்கவில்லை. தனிமுத்திரை என்பதைவிட குழுச் செயற்பாடே தொடர்கின்றது.

நாச்சியாதீவு பர்வீன்

நீங்கள் வெளியிட்ட நூல்கள் பற்றிய விபரத்தை தர முடியுமா?

அன்பு ஜவஹர்ஷா

மாணவர் குரல், தமிழ்ச்சுடர், புத்தொளி, சுமை, மினா, பிறையொளி என்ற சஞ்சிகை வெளியீடுகளில் எழுத்து பங்களிப்பு இருந்தது. *1973- 1975* கால கட்டத்தில் சஞ்சிகைகளின் வெளியான எனது கவிதைகள் "காவிகளும் ஒட்டுண்ணிகளும்" என்ற நூலாக வெளிவந்தது "பொறிகள்" பற்றி முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலில் குறிப்பிட்டு இருந்தேன். அநுராதபுரம் முஸ்லிம் மக்களின் வரலாற்று ஆவணமான "அநுராதபுரத்தின் முதுசொம்" எனது எழுத்து முயற்சியில் மைல் கல்லாகக் கூறலாம். பாடசாலை, கலாசாலை ஆண்டு, நினைவு மலர்களில் எனது பங்களிப்பு இருந்தது. இலக்கியத்திற்கு அப்பாற் பட்டு பதினைந்துக்கு மேற்பட்ட தொழில்சார் பிரசுரங்கள் என்னால் வெளியிடப்பட்டுள்ளது. சிங்கள நூல் ஒன்றும் கூட.

நாச்சியாதீவு பர்வீன்

கவிஞராக எழுத்துத்துறைக்குள் நுழைந்த நீங்கள் இப்போது கல்வித்துறை மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பிலான கட்டுரைகளை எழுதி அரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் உங்களது இப்பணியின் பெறுமானத்தை ஆசிரிய சமூகம் உணர்ந்துள்ளதா?

அன்பு ஜவஹர்ஷா

இன்று நீங்கள்சொல்லும் துறைகளில் குரல் தரத்தக்கவர் என்ற மகுடம் எனக்கு சூட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இத்துறையில் சில பிரிவுகளில் நான் மட்டுமே ஈடுபடுவதால் கேள்வி உள்ளவனாக இருக்கின்றேன். இப்பணியின் பெறுமானம் ஆசிரியர் சமூகம் மட்டுமல்ல கல்விச் சமூகமும் உணர்ந்துள்ளமை எனக்கு தினமும் வரும் வினவல்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

நாச்சியாதீவு பர்வீன்

உங்களது கவிதைகளில் அதிகம் பேசப்பட்ட கவிதையான "காவிகளும் ஒட்டுண்ணிகளும்" கவிதை பற்றிய கூறமுடியுமா?

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

அன்பு ஜவஹர்ஷா

"காவிகளும் ஒட்டுண்ணிகளும்" என்ற கவிதை சஞ்சிகைக்குரியது. ஒரு கால இலங்கை அரசியலில் இருந்த திசையைப் பயன்படுத்தி பல இலக்கியவாதிகளின் படைப்புக்கள் அத்திசை சார்ந்ததாக இருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னால் இது அடங்கிப் போனது. இத்தோடு பலவித இலக்கியப் போக்குகள் பற்றியும் இக்கவிதையில் விமர்சனம் இருந்ததால் இது பேசப்பட்ட கவிதையானது

நாச்சியாதீவு பர்வீன்

அநுராதபுரம் தமிழ் இலக்கியப்பரப்பின் முதுசமாக கருதப்படும் நீங்கள் இன்றைய அநுராதபுரத்து தமிழ் எழுத்தாளர்கள் தொடர்பில் திருப்தி அடைகிறீர்களா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விடைக்கான காரணம் என்ன?

அன்பு ஜவஹர்ஷா

1950கள் தொடக்கம் அநுவை நாகராசன் காலம் தொட்டு 1977க்குப் பின்னர் தமிழ் மக்கள் அநுராத புரம் மாவட்டத்தில் இருந்து புலம் பெயர்ந்த பின்னும் இளம் படைப்பாளிகளின் முயற்சிகள் தொய்யாது தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. முழுமையாக பெரும்பான்மை மக்கள் வாழும் மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுபான்மை யினர் வாழும் கிராமங்கள் உள்ளன. சூழ்நிலையால் 75,000 மக்களின் அடையாளமான இலக்கிய முயற்சிகள் காத்திரமாகத் தொடர்கின்றன. மறைந்த கெக்கிராவ நாச்சியாதீவு பர்வீன், வசீம் அச்சம் உட்பட பலர் நூல்கள் வெளியிட்டு இலக்கியப் பணியில் ஈடுபட்டும் பூரண திருப்தியையே தந்துள்ளனர். தந்து கொண்டு இருக்கின்றனர். வசீம் அக்ரத்தின் தனி முயற்சியால் பல ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் படிகள் சஞ்சிகையை விசேடமாக குறிப்பிடவேண்டும். கலாநிதி எம்.சி.ரஸ்மின் இப்பிரதேச மகன் என்ற வகையில் பெருமை கொள்ளலாம். இந்த வகையில் இந்த மாவட்ட இலக்கியப் பணி நம்பிக்கைக்கு உரியதா கவே உள்ளது.

நாச்சியாதீவு பர்வீன்

சிரேஷ்ட எழுத்தாளராக கணிக்கப்படும் நீங்கள் இதுவரை தமிழ் இலக்கியத்தின் ஏனைய துறைகளான சிறுகதை, நாவல் என்பவற்றில் கரிசனை செலுத்தாமைக்கு காரணம் என்ன?

அன்பு ஜவஹர்ஷா

சிரேட்ட என்பதை விட மூத்த எழுத்தாளர் என்ற பதமே பொருத்தமாக இருக்கும். வயதில் மூத்தவன் என்ற வகையில் விஞ்ஞானக் கட்டுரைகள், மாணவர் ஆக்கங்கள் கையெழுத்து சஞ்சிகை எழுத்து, சிறுகதை கவிதை தொழில்சார் கட்டுரை மொழிபெயர்ப்பு இவ்வாறு பல வடிவங்களில் ஈடுபட்டமையால்நாவல் போன்ற துறைகளில் ஈடுபடவாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் இரண்டு கவிதை தொடர்கள் வெளியாகியுள்ளன. எனது ஆக்கங்களில் ரசனை என்ற விடயத்தை மீறி அதிகமாக ஆக்கங்கள் அறிவுசார் தயாரிப்புகளாக இருந்துள்ளமையை இங்கு குறிப்பிடவேண்டும்.

நாச்சியாதீவு பர்வீன்

நவீன கவிதைகள் இருண்மை நிறைந்ததாகவும், சாதாரண வாசகனால் புரிந்துகொள்ள முடியாததாகவும் உள்ளதாக நிலவும் கருத்துப்பற்றி உங்களது கருத்து என்ன?

அன்பு ஜவஹர்ஷா

இந்த கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நவீன கவிதை இருண்மை நிறைந்ததாக இருந்தால் ஆயிரக்கணக்கான வாசகர் அத்துறையில் ஈடுபட மாட்டார்கள். அது போல இவ்வளவு கவிதை நூல்களும் வெளியாகி இருக்க முடியாது. ஆரம்ப காலத்தில் சில எழுத்தாளர்கள் இந்த குற்றச் சாட்டுக்கு ஆட்பட்டு இருந்தார்கள். சிலர் இவ்வாறு படைப்புகளை ஆக்குவதால் இந்த குற்றசாட்டுக்கு உட்படுகின்றார்கள். ஆனால் மற்றைய வடிவங் களைவிட இப்போது நவீன கவிதைகளில் தான் இலக்கியம் வாழ்கின்றது. வெளியாகும் நூல்களின் எண்ணிக்கைகளே இதற்குச் சான்றாகும். எனது இந்தக் கணிப்புக்கு எதிராக மாற்றுக் கருத்துக்களும் இருக்கலாம்.

நாச்சியாதீவு பர்வீன்

உங்களது இலக்கிய அனுபவங்களை சுயசரிதையாக எழுதும் எண்ணம் உண்டா?

அன்பு ஜவஹர்ஷா

படைப்பிலக்கியத் துறையில் எனது பங்களிப்பு போதுமானதாக இல்லை. ஆனால் கலை இலக்கிய அமைப்புகளுடன் பயணம் தொடர்கின்றது. இந்த அனுபவங்கள் சுயசரிதையாகும் என்றுநான் எண்ண வில்லை. ஆகையால் அப்படியொரு எண்ணம் என்னிடம் இல்லை.

நாச்சியாதீவு பர்வீன்


இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?

அன்பு ஜவஹர்ஷா

நவீன வசதிகளுடன் சகலரும் அவசரமாக நூலாக் கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இவர்களின் வாசிப்பு மிகக் குறைந்துள்ளது. சமூக வலைத்தள பாவனையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். மூத்த எழுத்தாளர் திக்குவல்லை கமாலுடன் நெருங்கிப் பழகிய போது எனது மிக முக்கிய அவதானிப்பு அவரது சிறுகதையொன்றின் கரு தோன்றி அது முழுமைபெற ஒரு மாதம் வரை ஆகலாம். ஆனாலும் தொடர்ந்து அவர் இலக்கிய களத்தில் இருப்பதால் 55 வருடங்களில் அவர் வெளியிட்ட நூல்கள் 100 ஐ தொட்டு கொண்டு இருக்கின்றன. ஆகவே வாசிப்பு மிக முக்கியமானது. முதலில் அதைத் தொடர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாச்சியாதீவு பர்வீன்

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் உங்களோடு பயின்று தமிழ் இலக்கியத்துறையில் புகழ்பெற்று விளங்கும் உங்களது நண்பர்கள் பற்றி சுருக்கமாக கூறமுடியுமா?

அன்பு ஜவஹர்ஷா

*பலாலி ஆசிரிய கலாசாலையில் 1973 ஆம் ஆண்டு பயிற்சிக்கு சேர்ந்த போது சில மாதங்களில் திக்கு வல்லை கமால் கலைவாதி கலீல் மூதூர் முகைதீன் ஜவாத் மரைக்கா போன்ற நண்பர்களுடன் சோர்கை உண்டானது. இதுவே பலாலியில் பஞ்ச பாண்டவர் என்ற அடைமொழியானது. எங்கள் பயிற்சியில் இரண்டாம் வருட மாணவர்களாகவும் பின்னர் முதல் வருட மாணவர்களாகவும் பீர்முகம்மது, ஹாபீஸ், யாஷத் ஓவியர் ரமணி, வல்வை ந.அனந்த ராஜா உட்பட பல இலக்கிய நண்பர்கள் இருந்தார்கள். கலாசாலையில் காணக்கிடைக்காது இருந்த மல்லிகை போன்ற மாதாந்த சஞ்சிகைகளை மாதந்தம் 25 பிரதிக்குமேல் விநியோகிக்க அந்த நட்புகளால் முடிந்தது.சனி, ஞாயிறு தினங்களில் மல்லிகை சிரித்திரன் ஆசிரியர்கள் உட்பட பல இலக்கியவாதிகளுடன் கலந்துரையாடவும் இலக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ளவும் இந்தக் காலம் வழிவமைத்தது. உண்மையில் இலக்கிய செழுமை சரியானதிசையில் ஆரம்பிக்க திக்கு வல்லை கமால் உட்பட கலாசாலை நண்பர்களின் நட்பு காரணமானது.*

நாச்சியாதீவு பர்வீன்

உங்கள் பால்ய நண்பர் தமிழகத்தில் வாழும் ஓய்வுநிலை பொலிஸ் அதிகாரி எழுத்தாளர் பேனா மனோகரன் பற்றி? இலங்கையில் இருந்து தாயகம்திரும்பிய படைப் பாளிகள் பாசறை என்ற மகுடத்துடன் கடந்த 45 ஆண்டுகளாக இலக்கியத்துடன் இணைந்திருக்கும் ஆய்வு பெற்ற காவல்துறை அதிபர் உங்களது பால்ய நண்பன்பேனா மனோகரன் முகநூலில் அடிக்கடி உங்கள்நட்பை நினைவு கூர்ந்து வருகின்றார். இந்த உறவைப் பற்றி ஏதாவது ?

அன்பு ஜவஹர்ஷா

*1960 - 1966 வரை ஒரே மதிவண்டியில் பயணம் செய்து இலக்கியம் உட்பட சகல விடயங்களிலும் இணைந்து இருந்து 1976ஆம் ஆண்டு வரை அநுராதபுரம் கலைச் சங்கத்தின் இணைச் செயலாளர்களாக இருவரும் பணியாற்றி இன்று வரை 63 ஆண்டுகள் தொடரும் நட்பு இது.*

*இன்று மதுரையில் வாழும் அவரின் "கற்றறிந்த காக்கைகள்" கவிதைத் தொகுதியை எனக்கே சமர்ப்பணம் செய்து இருந்தார். மதுரை மாவட்டத்தை சூழ்ந்துள்ள இடங்களில் நடக்கும் இலக்கியமேடைகளில் அவர் கடந்த பல ஆண்டுகளாக நட்சத்திரம் அதிகாலையில் நான் விழிக்கும் முகநூல்களை முக்கியமானது அவருடையதாகும்.*

*சம வயதினரான அவர் நட்புக்கு இலக்கணமாக உள்ளார்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரி சி.ரவீந்திரன்

# வழிகாட்டியாக வாழும் அன்பு ஜவஹர்ஷா

எழுபதுகளின் ஆரம்பங்களில் தமிழ்நாட்டில் "வானம் பாடிகள்" என்ற குழுவால் புதுக்கவிதையின் எழுச்சி இலக்கிய உலகில் புதிய தோற்றத்தைக் கொடுத்தது. அவர்களைப் பின் தொடர்ந்து ஈழத்து இலக்கிய வானிலும் புதுக்கவிதை எழுதப் பலர் முற்பட்டனர். அதில் வெற்றியும் பெற்றனர். அந்த வரிசையில் திக்குவல்லை கமால், அன்பு ஜவஹர்ஷா, M.H.M சம்ஸ், யோனகபுர ஹம்சா, ஜவாத் மரைக்காயர், கலைவாதிகலீல் என்று ஒரு கவிஞர் பட்டாளம் கவிதை எழுதப்புறப் பட்டனர். இக்கவிஞர்கள் தமது படைப்புகளை பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எழுதி வந்தனர். அவர்களுள் அன்பு ஜவஹர்ஷா என்ற படைப்பாளியும் வேகமாக எழுதி வந்த படைப்பாளியாகக் கணிக்கப்பட்டார். கட்டுரைகள் கவிதைகள் மல்லிகையில் வெளிவரும் போது இவரது பெயர் அச்சுக்கோப்பில் வித்தியாசமாகக் காணப்படும். அதாவது பெயருக்கான "புளக்" செய்து கொடுத்திருந்தார். மல்லிகையே அந்தக் காலங்களில் அன்பு ஜவஹர்ஷாவையும், திக்குவல்லை கமால் அவர்களையும் வளர்த்து விட்டது.

திக்குவல்லை கமால் அவர்களுடன் பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே கடித்தத் தொடர்பு இருந்தது. அதே போன்று "எலிக்கூடு" என்ற முதல் புதுக் கவிதைத் தொகுதியின் ஆசிரியர் கமாலின் நூலாகும். அதற்கு எனது ஊரின் தமிழ்மன்றத்தில் அறிமுக அரங்கையும் ஏற்படுத்தி நடாத்தினோம். இது அமரர் சி.க.இராஜேந்திரா காலத்தில் நடந்த நிகழ்வு. எனக்கு ஜவஹார்ஷா அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த அவரது முகவரியையும் எடுத்து வைத்திருந்தேன். அப்போது 1972ம் ஆண்டும் 1973ம் ஆண்டும் அனுராதபுரத்தில் ஒரு குறுகிய மாதங்கள் தங்கவேண்டிய நிலை அமைந்தது. அங்கு எனது ஊரவர்களின் வர்த்தக நிலையங்கள் இருந்தன. அவற்றில் என்னைச் சித்திரைப் புதவருட வியாபாரத்திற்கு வந்து நிற்கும்படி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருந்தனர். சிங்களம் பேசத்தெரியாத நானும் அங்கு சென்றிருந்தேன். அங்கு சென்றபோதே எனக்கு அந்த வர்த்தக நிலையத்தின் வியாபார நிலைமைகளை அவதானித்து ஆவன செய்பவனாக இருந்தேன். அதாவது பாதுகாப்பு அலுவர் பொறுப்பாகும். அனுராதபுரத்தில் அந்தக் காலத்தில் சிங்களம் மட்டுமல்ல; தமிழும் சரளமாக மக்கள் பேசுவதை கேட்க முடிந்தது. பத்திரிகைக் கடையில் தமிழ்ப் பத்திரிகை களும் சஞ்சிகைகளும் தெரிந்தன. ஒரு நாள் பத்திரிகை வாங்கச் சென்ற நான் பேசுவதற்கு தடுமாறினேன்.

அப்போ கடையில் இருந்தவர் தமிழில் கதைத்தார். நான் பத்திரிகையை வாங்கிய பின் ஜவஹர்ஷா என்பவரைத் தெரியுமா? எனக் கேட்டேன். “ஆம்” என்றுபதிலளித்தார்.

எனது பெயரையும் தங்கும் இடத்தின் முகவரியையும் கொடுத்து விட்டுவந்தேன்.

இரண்டொரு நாட்களின் பின் கடையின் வாசலில் சைக்கிள் ஒன்று வந்து நின்றது.

வந்தவர் எனது பெயரை கூறி விசாரித்துள்ளார்.

நான் எட்டிப்பார்த்து அவரிடம் சென்றேன்.

நான் ஜவஹர்ஷா என்றார்.

நான் ரவீந்திரன் என்று இருவரும் அறிமுகப் படுத்திக் கொண்டோம்.

அன்று தொடங்கிய நட்பு இன்றுவரை மகிழ்வாகச் செல்கிறது. அன்றைய தினம் பேசிச் சிரித்து இலக்கிய உலகையும் வலம் வந்தோம். தேனீர்கோப்பை யோடு இருவரும் அமர்ந்து பேசி மகிழ்ந்தோம். பின்பு நகரத்திற்கு வரும்போதெல்லாம் வந்து சந்திப்பார். ஜவஹர்ஷா சிரித்த முகத்தோடு பேசி மகிழ்வார். எனது எழுத்துகளை பத்திரிகைகளில் படித்ததாகவும் கூறி மகிழ்ந்தார் இவருடைய தந்தையார் “அன்புதாசன்” ஒரு படைப்பாளி என்றும் அதுவே தன்னை வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவியதாகவும்; தந்தையார் சுதந்திரன் பத்திரிகையில் ஆக்கங்களை படைத்தவர் என்றும் கூறினார். அன்றைய காலங்களில் (1972/1973) “அனுராத புரம் கலைச் சங்கம்” என்ற ஒரு கலை இலக்கிய அமைப்பை உருவாக்கி அனுராதபுரத்தில் வாழ்ந்த எழுத்தார்வம் கொண்டவர்களையும், கலைஞர்களையும் ஊக்குவித்து செயல்பட்டதை நேரே கண்டுவியந்தேன். அந்த நாட்களில் அனுராதபுரத்தில் எங்கும் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கதிரேசன் ஆலயம், விவேகானந்தா வித்தியாலயம், சகிரா வித்தியா லயம் என்றும் சிற்றம்பலம் தியேட்டர், வியாபார நிலையங்கள், ஆகியனவும் அரச திணைக்களங்களின் கடமையாற்றிய தமிழ்மொழி பேசும் உத்தியோகத்தர்கள் என்று மக்கள் செழித்து வாழ்ந்தனர். விவேகானந்தா, சகீரா பாடசாலைகளிலேயே இலக்கியக் கூட்டங்கள் நடைபெற்றன. பலபேர் வாழ்ந்தாலும் தலைவர் அன்பு ஜவஹர்ஷாவும் செயலாளர் பேனா-மனோகரனுமே நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்களாக இருந்தனர். இவர்கள் இருவரும் பள்ளித்தோழர்கள், ஒன்றாகக் கற்றவர்கள் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் இலக்கியம்,

1974ம் ஆண்டு அன்பு ஜவஹர்ஷா அவர்கள் ஈழத்துக் கவிஞர்கள் 42 பேரது கவிதைகளை அடக்கிய “பொறிகள்” என்ற புதுக்கவிதை தொகுப்பொன்றை வெளியிட்டு வைத்தார்.

மொழியாக்கம் என்று சகல இன மக்களுடனும் ஒன்றா கப் பயணிப்பார். பேனாமனோகரன் அனுராதபுரத்தில் ஒரு மரடோனாவாக மாவட்ட அணியிலும், தேசிய அணிமுகாமிலும் உதைபந்தாட்டத்தால் எல்லா இன மக்களாலும் அறியப்பட்டவர். இலக்கியத்தளத்திற்கு நண்பன் ஜவஹர்ஷாவால் வளர்த்தெடுக்கப்பட்டவர். நல்ல நண்பர்கள் என்பதை அறிந்தவர்களுக்குத் தெரியும். பேனா மனோகரன் (1976) பிராஜாவுரிமை இழந்த நிலையில் இந்தியாசென்றபோது மனோகரனின் நூலையும் வெளியீடு செய்து வைத்தவர். இன்றும் அந்த நட்பு அவர்களுக்குள் இருக்கிறது. அனுராதபுரம் கலைச்சங்கத்தில் சி.குமாரலிங்கம், மாவை.நித்தியானந் தன், சிவஞானம், சபேசன் என்று பல இலக்கியவாதிகள் வலம் வந்தனர். இங்குதான் எழுத்தாளர் அநுவை. நாக ராஜன் அவர்களும் வாழ்ந்து இவர்களோடு இணைந்து பங்காற்றினார். சித்திரைப் புத்தாண்டு கவியரங்குகளில் மாவை நித்தியானந்தன் தலைமையில் நானும் பங்கேற்றதும் நினைவில் உள்ளது.

1974ம் ஆண்டு அன்பு ஜவஹர்ஷா அவர்கள் ஈழத்துக் கவிஞர்கள் 42 பேரது கவிதைகளை அடக்கிய “பொறிகள்” என்ற புதுக்கவிதை தொகுப்பொன்றை வெளியிட்டு வைத்தார். அந்த நிகழ்விற்கு நானும் அனுராதபுரம் சென்று கலந்து கொண்டேன். ஜவ ஹர்ஷா அவர்கள் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை யில் கற்றகாலத்திலும் சென்றிருக்கிறேன். இவருடனான நட்பு நெடுங்காலமாக இருந்து வந்தது. பின்பு இவர் மன்னாரில் வாழ்ந்த காலத்தில் என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை. போர்ச்சூழல்; எனது தொழில், இப்படியே எனது காலமும் ஓடிக்கொண்டிருந்தது. நீண்ட காலங்களின் பின் சுமூகமான சூழ்நிலையில் யாழ்ப்பாணம் போய் வருகையில் அன்பு ஜவஹர்ஷா அவர்களைச் சந்தித்து வருவேன். அப்படியே எனது கவிதைத் தொகுப்பான “மீண்டு வந்த நாட்கள்” தொகுப்பிற்கு அவரிடமிருந்து வாழ்த்துரையைப் பெற்றது மனமகிழ்வையும் தந்தது.

ஜவஹர்ஷா என்ற எழுத்தாளுமை இப்போ இலக்கிய உலகில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். பல வருடங்களாக ஆசிரியர், அதிபர்களுக்கான வழிகாட்டி யாகச் செயல்பட்டு வருகிறார். பத்திரிகைகள் மூலம் பல நல்ல விடயங்களை எழுதி ஆசிரிய உலகத்தின் உயர்வுக்கு உதவுகின்றார். இலக்கிய உலகம் அவரை மறந்தாலும் ஆசிரிய உலகத்தின் மனதில் பதிந்து வாழ்கிறார். அன்பு ஜவஹர்ஷா அவர்கள் இலக்கிய உலகில் பலரை ஊக்கு வித்து வளர்த்தவர். இன்று அவருக்கு எழுதமுடியும் எழுத வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஹதூர்ஷா

அனுராத புரவனத் தடர்கரும் காலியில்
அமைந்தா றடியினில் அணிபெறும் உடலே!
கனகமும் நெய்தலும் கனரகம் இருந்தும்
காட்சியில் எளிமைக் கருத்துடைக் கடலே!
வினயமும் அன்பும் வீரா வேசமும்
வெளிவிடும் விழி,வாய் விளைமுகத் திடலே!
பனியிர வழிந்தது; பகலவன் உதித்தனன்;
:பஹதூர் ஷாவே! பள்ளியெ ழாயோ?

கலப்பட மில்லாக் கருத்துகள் பேசிக்
கண்ணிய மாயுப சரித்திடும் ஷாவே!
நலிவடை யாதெமை நட்பால், கவியால்,
நகைச்சுவை யால்மகிழ் வுறுத்திடும் கோவே!
இலக்கிய நண்பர் இடைவெளி போக்கிட
எண்ணியே வந்தனம், எழுதினி பாவே.
பலநாள் தூங்கினை, :பாங்கும் ஒலித்தது;
:பஹதூர் ஷாவே! பள்ளியெ ழாயோ?

தந்தையும் எழுத்தில் தாசனாய் வாழ்ந்தாவ
தனயனும் அவ்வழித் தாதையாய் ஆனாய்!
நந்தமிழ் வாழாக் காட்டிடை பிறந்தும்
நாச்சுவை தமிழை வளஉத்தனை தேனாய்.
"சந்திரன்" ஒளியில் சஞ்சிகை தந்தே
ஸஹரா விற்பசுந் தரைசெய லானாய்.
முந்தைய பெருமைகள் மூடுற நீயேன்
முகம்பட நிலமிசை உறங்குவை? எழுவாய்!

வெளியீ டெனிலுடன் விரைந்திடு வாயே,
விலைபல மடங்களித் ததுபெறு வாயே.
வழியிலை யெனிற்செல வருத்தமும் எழுதி
மாநிதி தனையுமஞ் சலில்தரு வாயே.
எழுத்தியல் மாந்தருன் இயல்பினிற் பலரை
இலங்கையிற் கொள்ளுவ ரெனில்வாழ் வாரே.
பழுதுறற் கவரிசை பாய்விரித் தனையோ?
:பஹதூர் ஷாவே! பள்ளியெ ழாயோ?

நின்சிறு வீட்டின் நிலைப்பே ழைகளும்
நிலமும் கூரையும் நூல்களில் மூழ்கத்
தென்னகம் வீட்டயல் தெருவென நினைத்துத்
திரிந்தடிக் கடிநீ சிறைகொண்ட நூல்கள்!
நண்பரும் பிறரும் நகைச்சுவை மிகவே
"நாடுதல் ஏன்தமிழ் நாட்டையுன் கால்கள்?
என்னக டத்த"லென் றிடைவின வியதால்
இடக்காய்ப் பள்ளியில் இசைவுகொண் டனையோ?



"நாட்பரி தி"யெனுமவ் வேட்டினிற் செய்தி,
நவகவி யெனவந் நாள்முதற் புகுந்தாய்.
நாட்டினிற் புதுக்கவி நடத்திய பேருள்
நன்முதல் இடத்தினை நாட்டிடத் தகுந்தாய்.
சூட்சும மாய்ப்பல சுவைஞரை ஈர்க்கும்
தோதுடை நடையினில் துயரங்கள் பகிர்ந்தாய்.
காட்டிய நடையினைக் கவிபலர் திருடிய
காரணத் தாலா கடுந்துயில் விழைந்தாய்?

காட்டிடை நீகண்ட "காவி"க ளுடனே
கடும்"ஒட் டுண்ணி"க ளினையுமி ணைத்துக்
கூட்டிய தொகுதியிற் குறைகண் டெவரோ
கூக்குர லிட்டதிற் கோபமுற் றனையோ?
போற்றிடச் சிலரின் "பொறி"களைச் சேர்த்துப்
புதுநூல் செய்தனை, போலிகள் கனைத்துத்
தூற்றின வோதம தெழுத்துகள் வாராத்
துயரத னாலே? துயிலுதல் முறையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியெழுச்சி

முற்போக் கிலக்கிய மூதறி வெதிஉக்கும்
மூடங் களுடன் வாதமே புரிவாய்.
புற்போக் கெழுத்தெனப் புதுக்கவி தைகளைப்
புறஞ்சொல் பலருடன் போர்தொடுத் தெரிவாய்.
நற்போக் கிவையென நன்மனத் தெடுத்தோர்
நானிலத் தின்றெலாம் பெருகினர், அறிவாய்.
சொற்போர் குறைந்திடச் சோர்வுற நீயும்
துயில்கொளத் துணிந்தா சுகம்பெறு கின்றாய்?



சுங்கம், விவசா யத்திணைக் களங்களில்
துரையாய் விளங்கும் துறைகளில் வடிவாய்
அங்கம் வகிக்குமுன் ஆற்றலைக் கண்டே
அவையுனை ஒருநாள் அழைத்தன முடிவாய்.
பங்கக் குழிகள் பறித்திடு வோரால்
பதவிகள் மாறி,; பந்தமும் பிடியாய்!
சங்கடம் இதனால் தழுவிய தாலே
தவநிலை மாறித் துயிலுவை யோநீ?

வரவேற் புரையுடன் வாழ்த்துரை, அஞ்சலி
வரைந்திடு வதில்நீ வாரிசு, வல்லாய்.
உரைகளின் முன்பின் ஒரிடத் தேனும்
உன்பெயர் பொறிப்பதற் குடன்படு கில்லாய்.
அரியவுன் ஆளுமை அடுத்தவர் அறியார்.
“ஆதலி னாற்பெயர் அவசியம் பிள்ளாய்!
பொறி!“யெனச் சொல்லநீ, “போவோய்!” என்றே
போயோய் வெடுக்கவா புகுந்தனை துயிலில்?

சிறுகதை சிலவே செய்திருக் கின்றாய்,
சிறுவரும் புலம்பிடச் செயலறுந் தனையே!
பெறுமதி அறியாப் பிடரிகள் கூடிப்
பேரிலக் கியத்தின் பெரியோர் அணியைக்
குறைமதிப் புறுத்திக் குழறிடும் கீழ்மைக்
கொள்கையி னாலிலக் கியத்துடன் பிணக்கோ?
சிறுதுயில் கலைவாய், செருக்களம் வருவாய்,
சீக்கிரம் எழுவாய் செம்:பஹ தூரே!

கலையிலக் கியத்திலுன் காதலி நாட்டம்
காட்டா விடினும் காய்ந்திடாள் கனலாய்.
பலநாள் பொறுத்தனள், பற்பல உதவினள்,
பாதியிற் கலையைப் பழித்துரைப் பாளா?
தலையெடுத் துனதிரு தளிஉமழ லைகளும்
தாள்களைக் கிழித்துச் சதிபுரிந் தனரா?
உலகிலுன் பங்களிப் பொடுங்கிய தாலே
உளஞ்சலித் துளையுமெம் ஓலமும் கேளாய்!

சேதுயர் கரைதனில் தெளிவிளக் கொளியாய்ச்
சேர்ந்த “மினா”வினிற் சேவைகள் கொண்டாய்.
நீதுயிற் கிடையில் நெருடுமு ணர்வினில்
நின்றோர் இதழை நேசிக் கின்றாய்.
ஆதர வாய்மா ணாக்கரின் எதிர்நாள்
அமைந்திடற் கென்றே அறிவுரை விண்டாய்.
பூதளிர்த் திடவிப் பங்குபோ தாதே!
பஹதூர் ஷாவே! பள்ளியெ ழாயோ?

தோன்றிய நாளே தொலைபவர் சில்லோர்,
தோன்றிய நாளே துடிப்பவர் சில்லோர்,
தோன்றிய பின்சிறு தொலைவரை சென்று
தோலைபவர், துயில்பவர், சோர்பவர் பல்லோர்.
ஊன்றிட வழியொன் றமைத்திடற் கியலார்
ஒழிகவே! எனினும் ஊன்றிநீ சொல்லேர்ச்
சான்றுகள் கொண்டுமேன் தாள்மடி துயில்வாய்?
தனிவழி :பஹதூர் ஷாவே! எழுவாய்!

- தமிழ்மாமணி அல் அஸூமத் -

நன்றி - தினகரன்(1981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சி.மொகமட் ஜவகர்ஷா என்ற அன்பு ஜவஹர்ஷாவும் பெரியசாமி மனோகரன் என்ற பேனா மனோகரனும் அநுராதபுரம் புனித வளனார் கல்லூரியில் *1960 – 1968* இல் ஒரு (பாட) சாலை மாணாக்கர்கள். பள்ளித் தோழர்கள். பால்ய சிநேகிதர்கள். சிங்களத்தில் “அம்பயஹலுவொ” என்றொரு சொலவடை உண்டு. அதை மாங்காய் /மாம்பழ நண்பர்கள் என்று மொழிபெயர்க்கலாம் என்று நினைக்கிறேன் என் சிங்களச் சிற்றறிவில்... பட்டறிவில். *1955* முதல் *1959*. வரை புனித வளனார் கல்லூரியின் ஆண் மாணவர்கள் நாற்றங்காலான திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையில் ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பெண்மாணவிகளுடன் ஒன்றாகப் படிப்போம். நான்காம் வகுப்புத் தகுதி பெற்றதும் புனித வளனார் கல்லூரிக்கு “நாடு கடத்தி” விடுவார்கள். ஆதிச் சிங்களனாக அறியப்படுகிற இந்திய இளவரசன் விஜயன் அவன் நண்பர்களையும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தியது போல. ஆனால் எங்களுக்கு நல்ல கல்வியும் அதன் மூலம் வேலை வாய்ப்புகளும் உத்தரவாதம் பெண்மாணவிகள் மட்டும் தொடர்ந்து அங்கேயே படிப்பார்கள்.

நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை புனித வளனார் கல்லூரி எனப்படும் சென் ஜோசப் கல்லூரியில் ஒன்றாக்ப் படித்தோம். விளையாடினோம். செல்லச் சண்டைகள் பிடித்தோம். பின் மறுபடியும் ஒன்று சேர்ந்து கொண்டோம். இன்னும் இரண்டு மாணவர்கள் எங்களுடன் பின்னர் இணைந்து கொண்டார்கள். அவர்கள் வேலாமுருகு இரவீந்திரனும் ஆறுமுகம் இரகுபதியும். ஜவகர்ஷாவும் இரகுபதியும் அப்போதே வளர்த்தி ஆனவர்கள். நானும் இரவீந்திரனும் கொஞ்சம் குட்டை. இரகுபதி தந்தையும் இரவீந்திரன் தந்தையும் அரசு ஊழியர்கள். அநுராதபுரத்தில் பணியாற்றினார்கள். நாங்கள் நால்வரும் தான் நான்காம்

# அன்பு ஜவகர்ஷா என்னும் ஆலமரம்...

பேனா மனோகரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு அல்லது ஐந்தாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை முதல் நான்கு இடங்களில் வகுப்பில் பெறுபேறுகள் பெறுபவர்கள். அதனால் முதல் வரிசை மாணவர்கள். இரவீந்திரன் யாழ் சென்று ஏ.எல். முடித்துப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுப் பின்னர் அவுஸ்திரேலியா சென்று இப்போது அங்கேயே இருப்பதாக முகநூல் வழி அறிகின்றேன். இரகுபதி எங்களுமன் ஓ. எல். முடித்து விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா முடித்து ரப்பர் போர்டு/டீ போர்டு ஏதோ ஒன்றில் பணியாற்றி பணிநிறைவின் பின்னர் சட்டத்தரணியாகப் பதிவு செய்து கொழும்பு நீதி மன்றில் பணியாற்றி இப்போது யாழ் நீதிமன்றில் பணியாற்று கிறார். வீட்டு உபகரண வியாபாரமும் யாழில் செய்கிறார். குல்லுமலைப் பகுதியில் அப்போது குடி இருந்தார் ஜவஹர்ஷா. குருநாகல் ரோட்டு பள்ளிவாசல் பக்க மிருந்து பாடசாலைக்கு வருவார். நான் என் தந்தை தாய் மன்னார் மாவட்டம் முருங்கனில் இருந்து அநுராதபுரம் விஜேந்திரா உரிமையாளர் வீட்டில் குடியிருந்தோம் 1952 முதல் என்று ஞாபகம். 1966/67 வரை அதே வீட்டில் தான் குடி இருந்தோம்.

ஜவகர்ஷாவின் தந்தை அன்புதாசன் என்ற புனைப் பெயரில் கிழக்கு மாகாணத்தில் இருந்து எழுதிய புகழ் பெற்ற எழுத்தாளர். ஜவகர்ஷாவின் சிறுவயதில் தந்தை மறைந்து விட்டார் என்பதை அப்போதே நான் அறிவேன். அவரது அம்மா (உம்மா) எட்டாம் வகுப்பு முதல் தெரியும். அவரின் எழுத்தார்வமும் எழுத் தாற்றலும் எட்டாம் வகுப்பிலேயே எங்களுக்கு /எனக்குத் தெரிய வந்தது.

பள்ளிப் பாடப்புத்தகங்களுடன் ஏதோ ஒரு சஞ்சிகையோ வார இதழோ கொண்டு வருவார். எனக்குக் கொஞ்சம் பொறாமையாகக் கூட இருக்கும் என்பதைத் திறந்தமனதுடன் பதிவு செய்ய விழைகிறேன். அநுராதபுர நிருபராக இருந்தார். பின்னர் பத்தாம் வகுப்பு படிக்கும் போதே "தினபதி" நாளிதழின் நிருபராகவும் நியமிக்கப்பட்டார். படிப்படியாகத் தந்தையின் முதுசம் வழி அன்பு ஜவகர்ஷா ஆகவும் ஆனார். அந்தப் பெயர் நாளிதழ்களில்... வார இதழ்களில்... ஞாயிறு சிறப்பிதழ் களில் வெளிவரக் கண்டு நாங்கள் நான் மற்றும் இரகுபதி வியப்படைந்தோம். "கதம்பம்" என்றொரு மாத இதழ் அப்போது வெளிவந்தது. முதல் கவிதை / சிறுகதை எதில் வெளிவந்தது என்று நினைவில் இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்ட போது 1964 வெளிவந்த புகைப்படங்கள் எங்களை என்னவோ செய்தது என்றே சொல்ல வேண்டும். பென்சிலால் அவரது படங்கள் கோட்டோவி யமாகப் பார்த்துப் பார்த்து வரைவோம். அப்படியே மகாத்மா காந்தி நேரு படங்களையும். சிவாஜி எம்ஜீஆரையும் வரைய முயற்சித்ததாகவும் ஞாபகம். இவையெல்லாம் 1964/65 காலகட்டங்களில் நடந்ததாக இருக்கலாம்.

இந்தக் கல்வி சாரா முயற்சிகளுக்காக ஆசிரியர்களிடம் பாராட்டும் திட்டும் கூட வாங்கி இருக்கிறோம். ஆனால் அடி வாங்கியதில்லை. அடிவாங்கி இருந்தால் அது நானாகத் தான். நான் கொஞ்சம் குழப்படி /சேட்டையான மாணவன். ஜவகர்ஷா அப்படி அல்ல. அவர் அம்மா பிள்ளை. நான் அப்பா பிள்ளை. அவரது உம்மா அவர் பள்ளி விட்டு மாலையில் வீடு திரும்பத் தாமதமானால் முதலில் தேடிவருவது என்னைத் தான். உம்மா தலையைச் சேலைத் தலைப்பால் மூடி ஒருகையால் விலகாமல் பிடித்துக் கொண்டே நடப்பார்கள். அவருக்குத் தம்பியர் இருவர். எனக்கு ஒரு அண்ணன் மூன்று தம்பிகள் இரண்டு தங்கைகள். ஏழு பேர் கொண்ட பெரிய குடும்பம் எனது.

அன்பு ஜவகர்ஷாவின் ஆளுமை... தலைமைப் பண்பு ஆசிரியர்கள் பிற மாணவர்களுடன் நட்பு பேணுதல் எல்லாம் க.பொ.த.(சா.த.) படிக்கும் போதே வெளிப்பட்டு விட்டன. அதனால் அவர் ஆசிரியர்களுக்கு மேலும் நெருக்கம் ஆனார். இந்நிலையில் எங்கள் கல்லூரியும் பௌத்தம் தவிர இதர மத வழிபாட்டுத் தலங்கள் அரசு அலுவலகங்கள் புதிய நகருக்கு மாற்றப்பட்டன. நானும் அன்பு ஜவஹர்ஷாவும் அனேக மாக ஒன்றாகவே அலைந்து திரிந்தோம். மல்வத்து ஓயாவின் மணற்பரப்பில் எங்களது குதூகலமான விளையாட்டின் ஞாபகம் இங்கே வைகைக்கரையை கடக்கும்போதெல்லாம் கிளர்ந்தெழும்.

அன்பு ஜவஹர்ஷாவின் இலக்கிய ஈடுபாடு அபாரமானது. அனைவரையும் வசீகரிக்கும் சிறப்புத் தன்மை கொண்டவர் அவர். அவரது மிதிவண்டிதான் எங்கள் சொகுசு வாகனம். பாடசாலை, வீடு, மைதானம் என ஆலோலம் பாடி அலைந்து திரிந்தோம். அன்பு ஜவஹர்ஷா எனும் என் நண்பனின் நட்பானது என்னையும் ஒரு எழுத்தாளனாக மாற்றியது. இலக்கியம் கவிதை என எங்களது பயணத்தில் கால்பந்தின் மீதான தீராத காதல் என்னை காற்பந்தாட்ட வீரனாக மாற்றியது..

காலமாற்றம் என்னை நாடு கடத்தியது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கவிதையோடும் கால் பந்தோடும் காதல் கானம் பாடிக்கொண்டிருந்த எனக்கு காக்கிச்சட்டையை மாட்டிவிட்டது. காலத்தின் கட்டாயம் கவிதைக்காரனான நான் காக்கிச் சட்டைக்காரனாக. மாறிப்போனேன். இதற்கிடையில் எனது கவிதைகளை தொகுத்து அன்பு ஜவஹர்ஷா "சுமைகள்" என்ற கவிதைத்தொகுதியை வெளியிட்டார். தூரத்தினால் நாங்களெல்லாம் பிரிந்திருந்தாலும் இதயத்தினால் நாமிருவரும் இன்னும் இணைந்தே இருக்கிறோம்.

எனது நண்பனின் சிறப்புக்களை வெற்று வார்த்தைகளால் வெளிக்கொணர என்னால் முடிய வில்லை. சுமார் 6 தசாப்தங்களை கடந்த எமது நட்பில் இதுவரை எந்த விரிசலும் ஏற்பட்டதில்லை என்பது சந்தோசமான சங்கதியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு எனும் ஆளுமை!




ஆளுமையின் அகராதி
அநுராபுரிக்குள் அடங்கியுள்ளது.
இயலுமைகளை மட்டுமே -
இற்றைப் படுத்தும் ஆளுமை
சாஹிராவின் சுவடுகளில் முக்கியபதிவோடு அவர்

அன்புமிகு ஆசானாய்
ஆற்றல்மிகு அதிபராய்
கல்வித்தொண்டோடு
கலைச்சேவை செய்திட்ட
கவரிமான் அவர்..

அன்பொழுக பேசி
பண்பொழுகப்பழகி
இன்பமுறும் இனிய தந்தை
வைகறையைத் தேடிய வானம்
புன்னகைப் பூக்களின் - புதிர்
இதழ் திறந்து முத்துதிர்க்கும்
அவர் புன்னகையில் ...
புதையாதோர் யாருமிலர்

முத்தமிழில் இதழ் திறக்கும்
நாவலராய் பாவலராய் -
எழுத எத்தனிக்கும் யாவருக்கும்
காவலராய் கைகொடுத்து
கரைசேர்க்கும் கலையுலக பாரி

மாந்தருக்கு அன்பிலே வேந்தரானவர்...
புதுக்கவிதை உலகத்தில்
புதுமையானவர்

ஆர்ப்பரிக்கும் அலைபோல
அன்பினைச் சொறியும்
ஆர்ப்பாட்டமில்லாத ஆளுமை
அதனாலே அன்பு எனும்
அடைமொழி அழகாகப் பொருந்துது.

அநுராதபுரமென்று சொன்னாலே
"அன்புவைத் தெரியுமா"...?
என்றுதான் கேட்கின்றார்கள்
இந்த ஆளுமையின் ஆற்றல்

நேர்மை எனும் ஒளியில்
பட்டைதீட்டப்பட்டது போலும்

அநுராதபுரத்தின் வரலாற்றில்
அழியாத கோலமாய்
பல்லாண்டு வாழும் நாமம்
ஓடும் நதியை பாட முனைந்து
தோற்றுப்போனோம் நாமும்.

பாத்திமா நிஸ்ரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பஷீர்

# காவிகளும் ஓட்டுண்ணிகளும்

ஜவஹர்ஷாவின் அறுபத்தேழு கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பில் தனது சமர்ப்பணக் கவிதையிலே, "சமுதாய அநியாயங்களைப் பொறுக்காத குமுறல்கள் அனுபவ விமர்சனங்களான படியால், தர வேறுபாடுகளையும், தத்துவத் தெளிவுடன் நேச முரண்பாடுகளையும் என்னுள்ளேயே தவிர்க்க முடியவில்லை. இது சாதனைக் கோபுரம் என்ற கோஷமில்லை என்னிடம். எனது ஓலைக் குடிசைக்கு வாருங்கள். மிகச் சரியாக விமர்சியுங்கள்!" என்ற வரிகளும், யோகராஜா - சுமால் ஆகியோரின் மாறுபட்ட அபிப்பிரயங்களையும் நோக்குமிடத்து, கவிஞரது ஆழமான இலக்கியப் பார்வை நிதர்சனமாகிறது. இத் தொகுதியிலுள்ள பெரும்பாலான கவிதைகள் ஏழ்மைக் குமுறல்களை, சமுதாய முரண்பாடுகளை, கொள்கை முழக்கங்களை, பெரிய மனித போலி வேஷங்களை அனுபவ வெளிப்பாடுகளாக உணர்த்துகின்றன!

சில கவிதைகளின் கருப் பொருள்கள் வழக்கமான பழகிப்போன கோஷங்களாகவே இருக்கின்றன. என்றாலும் ஜவஹர்ஷாவின் சொல்லாட்சியும், இறுக்கமும், கவிதை பொழிகின்ற பாணியும் விஷய ஞானத் தெளிவும், இளங்கவிஞர்கள் வரிசையிலே தனி முத்திரை பொறிக்கப்பட்ட பாடல்களால் இவர் சிறந்து விளங்குகின்றார். "நெஞ்சச் சிறையில் உஷ்ண கீதங்கள்!" என்ற கவிதை அதற்கு சிறந்த சான்றாகும். வாழ்வின் ஏற்ற இறக்கங்களை, துன்ப அலைகளை ஒரு மெல்லுணர்வோடு அணுகி பாமரனும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் கவிதைக் கற்களை அடுக்குகின்ற விதம் பாராட்டிற்குரியது.

பிறந்த நாள்
கேக் சுற்றி வந்த பத்திரிகையில்
ஒரு செய்தி:
பசியால் இரண்டு
குழந்தைகள் இறந்தனர்!

என்ற கவிதையின் மூலம் ஒரு புதிய செய்தியைச் சொன்னாலும் இன்னும் ஆழமாக இதைச் செய்திருக்கலாமே என்ற குறையும் இல்லாமலில்லை. நிகழ்கால அரசியல் சூத்திரதாரிகளின் பலவீனங்களை ஒரு வித நையாண்டித் தளத்தோடு சாடுகின்ற துணிச்சல் இவரது கவிதைகளுக்கு உண்டு. உதாரணம் - சிற்பங்களும் சிற்பிகளும் கவிதை

"ஒரு படைப்பாளியின் எத்தகைய படைப்பாயினும் அதில் அவன் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் புலப்பட வேண்டும். இந்த அறிவுரைக்கு மிக விரிவான விளக்கம் கூறுவதுதான் பொருத்தம். கவிஞர் தனது பண்பாட்டுக் கூறுகளையும் தாண்டி, பிற பண்பாட்டு மோசடிகளை ஒரு சத்திய ஆவேசத்துடன் கூற விழைந்த போது தங்கள் வீட்டுக் கூரைகளைத் திருத்திக் கொண்டாலே போதுமானது, பக்கத்து வீட்டுச் சில்லுகளை நீர் ஏன் குத்திக் காட்டுகின்றீர் என்ற சிலரது விமர்சன விவாதங்கள். ஒரு படைப்பாளியின் எழுத்துக்களில் பண்பாட்டுக் கலாசார நெடி வீசுவதற்கு முன் மனிதநெடி வீசட்டும். ஏனென்றால் நாமெல்லோரும் மனிதர்கள்.

எங்களுக்குள்ள
ஒரே பொழுதுபோக்கு
மனைவிகளான படியால்
நாங்கள்
என்றும் குசேலர்களே!

என்ற வரிகளை பொருளுணர்ந்து படிப்பவர்கள் அதன் அர்த்தத்தில் லயித்து விடுவார்கள். இக்கவிதையில் ஆழ்ந்து ரசித்தபோது தமிழகத்துதீபம் இதழில் முன்னர் வெளியான ஒரு கவிதை நினைவிற்கு வருகிறது.

கரண்ட் தட்டுப்பாட்டில்
மெல்லிய முன் இருட்டில்
சாத்திய முகப்புகளைக் கண்டு
முக்கோண நோட்டீஸ்
முகம் வீங்க அழுகிறது!

சிக்கன வாரக்
கொண்டாட்டங்கள்
பிரமாண்டமான மேடைகள்
"டுவிட்" கோட்டிலிருந்த
தங்க பொத்தான்களைத் தடவியவாறு
மந்திரியார் பேசினார்
செலவைக் சுருக்கினால்
ஏழைகள் வாழ்வு
சுபீட்சம் அடையும்.

போன்ற பல்வேறு கவிதைகளும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. காவிகளும் ஓட்டுண்ணிகளும் பல கருத்துச் செறிவுள்ள சுவையான கவிதைகளடங்கிய நூல்.

அன்பு ஜவஹர்ஷாவின் ஆற்றலையும் வளர்ச்சியையும் எடை போடுவதற்கு இந்நூல் துணை புரிவதோடு, சமுதாய அவலங்களை கலைத்துவத்தோடும் யதார்த்தத் தோடும் சித்திரிக்கின்ற பல கவிதைகள் இத்தொகுப்பின் சிறப்பிற்குத் துணைபுரிகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம்

கே.எம்.எம் ஷா
66. 23. முஸ்லீம் கொலனி
மட்டக்களப்பு 1.4.1987

அன்புள்ள ஜவஹர்ஷா

எனது துவா சலாம்

உங்கள் கடிதம். பத்திரிகை எல்லாம் கிடைத்தன. நாங்கள் நல்ல சுகம் உங்கள் குடும்ப சுகம் அறிந்து மகிழ்ந்தேன். உங்கள் தாயார் நலம் அறிந்து மகிழ்ந்தேன். இரு தம்பிகளும் திருமணம் செய்து நிலையான ஒரு வாழ்க்கையில் இருப்பது மேலும் மகிழ்வு தருகிறது.

உங்களை, உங்கள் பெயரை நான் எப்படி மறக்க முடியும். அந்தப் பெயரே ஒரு சரித்திப் பின்னணி கொண்டது. எனது நண்பர் உங்களுக்கு அந்தப் பெயரை வைத்து விட்டு என்னிடம் வந்து சொன்னார்.

"பித்தன் நான் என் மகனுக்கு ஜவஹர்ஷா என்று பெயர் வைத்திருக்கிறேன்" என்று

"அது என்ன ஜவஹர் ஷா? புதுமையான பெயர்" என்று கேட்டேன்

"என்னுடைய மகன் எதிர்காலத்தில் எப்படி இருப்பானோ எனக்கு தெரியாது. நாமும் நமது இலச்சியங்களும் நம்மோடு முடிந்து போனாலும் போகலாம். நமது பிள்ளைகள் நமது எண்ணங்களை அபிலாசைகளை நிலைப்படுத்துவார்கள் என்பது நிச்சயமில்லை. என்றாலும் நமது கனவுகள் இப்படியொரு பெயரை வைப்பதிலாவது நிறைவேறட்டும்" என்றார்

அவருடைய எண்ணங்கள் என்ன என்பது எனக்கு புரிந்தது என்றாலும் எதுவும் தெரியாதவனைப் போல் கேட்டேன் "இந்தப் பெயரில் என்ன பெரிய இலச்சியம் சிறைப்பட்டிருக்கிறது?" என்று கேட்டேன்.

"அந்தப் பெயரில் இலட்சியங்கள் எதுவும் இல்லை தான் என்றாலும் எனது இலச்சிய நாயகர்கள் அங்கே இருக்கின்றார் கள்." என்றார் "அதைத்தான் கொஞ்சம் விபரமாகச் சொல்லுங் களேன்" என்றேன். நண்பர் அன்புதாசன் இப்படித் தொடங்கினார்.

"கிழக்கு நாடுகளில் இன்று நிலவும் அரசியல் சூழ்நிலை களை அவதானிக்கும் பொழுது என்னைப் பொறுத்த வரையில் ஜவஹர்லால் நேருவுடைய அரசியல் நிதானத்தை, உறுதியை, தேசிய நோக்கத்தை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். நான் ஒரு அரசியல் வாதியாய் இருந்தால் நிச்சியம் நேருவின் அணியில் தான் சேருவேன். ஆக ஜவஹர்ஷாவால் நேருவில் எனக்கு ஒரு பற்றுதல் மதிப்பு வளர்ந்து வருகிறது. அதே போல ஈழத்து இலக்கியத்தை உற்றுப்பார்த்தால் பித்தன் என்ற எழுத்தாளன் மிக உன்னதமாகத் தோற்றமளிக்கிறான். இன்னும் நூறு வருடங் களுக்குப் பிறகும் கூட இலங்கையில் ஒரு "பித்தன் தோன்றுவான் என்பது நிச்சயம் இல்லை. எனவே பிற்காலத்தில் அரசியல் நிதானத் துக்கு ஜவஹர்லாலும், ஈழத்து இலக்கியத்துக்கு பித்தன் என்ற ஷா உடைய பெரும் பலராலும் போற்றப்படும் போதும் அந்த இரு வருடைய பெயரையும் தாங்கி என் பிள்ளை இருப்பான்" என்றார்.

இந்தக் கதையை அவர் சொல்லும் போதே என் கண்கள் நீர் கட்டியது. அந்த நண்பன் என் மீது வைத்திருந்த அன்பு பாசம் நம்பிக்கை போன்றவைகளை அன்புதாசனிடம் மட்டும் தான் நான் அனுபவித்திருக்கின்றேன். இன்றுவரை வேறு யாரிடமும் நான் அதைக் காணவில்லை. அனுபவிக்க வில்லை. அத்தகைய நண்பனுடைய குடும்பத்தைக் கட்டிக்காக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை காரணம் அன்று முதல் இன்றுவரை நான் புலவனாகத் தான் இருக்கிறேன். புரவலனாக இல்லையே?

எழுத்துலகில் உங்களுடைய பெயர் பேசப்படுவதைக் கேட்டிருக்கிறேன். பத்திரிகைகளில் படித்திருக்கிறேன் என் மனைவியிடமும் உங்களைப் பற்றி அறிமுகப் படுத்தியிருக்கிறேன்.

சில சந்தர்ப்பங்களில் கே.எம்.எம். ஷாவுக்கும் ஜவஹர்ஷாவுக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசுவதைக் கேட்டு வாயடைத்துப் போயிருக்கிறேன்.அரசியலிலும் சரி இலக்கியத்தி லும் சரி கோமாளிகள் நிறைய இருக்கின்றார்கள் நேரடியாக எதுவும் தெரியாது. தெரிந்து கொள்ளும் திறமையும் இல்லை ஆனால் எல்லாம் தெரிந்தது போல் பேசுவார்கள் ஒரு முறை கொழும்பில் இருந்து மட்டக் களப்புக்கு வருகிற றெயினில் சந்தித்தேன். உடனே கேட்டார் நீங்கள் தானே "பித்தன்" என்றார்.

நான் தலையசைத்தேன். உடனே என்ன சொன்னார் தெரியுமா?

"சென்ற வாரம் உங்கள் கவிதையொன்று படித்தேன் அற்புதமாக இருந்தது" என்று சொன்னார். இலக்கிய கோமாளிகள் என்று சொன்னேனே உங்களுக்கு புரிகிறதா?

இலக்கிய உலகம் இன்று சினிமா உலகம் போல் மாறி வருகிறது மேக்கப் இல்லாத எழுத்தானனைக் காண்பது அரிதாகி விட்டது. "மின்னல்" பத்திரிகையில் என்னைப் பற்றி எழுதி யிருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன் எதிர்பார்க்காத ஒன்று. யாருமே செய்யாத செய்ய முயற்சி செய்யாத ஒன்றை அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்களைப் பாராட்ட வேண்டும். ஏனென்றால் அது வெளிவரவில்லை என்றால் நீங்கள் என்னுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது அல்லவா?

அவர்கள் கட்டுரையில் பல முரண்பாடுகள் தென் பட்டாலும் அவைகளை நான் பெரிது படுத்தவில்லை. இளைய நண்பர்கள் அவர்களுடைய முயற்சியையும் தைரியத்தையும் கெடுத்துவிடக் கூடாது என்பதனால் அந்த முரண்பாடுகள் பற்றி அவர்களுக்கு எழுதவில்லை. மேலும் என்னுடைய வாழ்க் கையை ருசுப்படுத்தக் கூடிய தஸ்தாவேஜுகள் வேறுயாரிடமும் இல்லையே. உங்களுக்கு இந்த கடிதம் எழுதத் தொடங்கியதும் பழைய நினைவுகள் அணை உடைந்த வெள்ளம் போல பாய்ந்து வருகின்றன. எதை எழுதுவது எங்கு தொடங்குவது என்று தெரியாமலேயே எழுத்து ஓடிக் கொண்டிருக்கின்றது.

உங்கள் கடிதம் கிடைக்கும் போது நான் ஊரில் இல்லை எனவே கடிதம் எழுதத் தாமதமாகி விட்டது. என் மனைவி கூட உங்கள் கடிதத்தைத் தரும் பொழுது இந்தப் பிள்ளை கடிதம் எழுதிவிட்டு உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கும் கெதியாக பதில் போடுங்கள்" என்று சொன்னார்.

எனவே நான் மேலும் கடிதத்தை பெரிதாக்காமல் முடிக்க நினைக்கிறேன். உங்கள் தந்தைக்கும் எனக்கும் உள்ள நட்புறவில் சிலவற்றையாவது உங்களுக்குச் சொல்லி என் மனப்பாரத்தைக் குறைத்துக் கொள்ள நெஞ்சு விளைகிறது. மற்ற கடிதங்களில் எழுதுகிறேன். உங்கள் தம்பிமார்களுக்கு என்னை அதிகம் தெரியாது என்று நினைக்கிறேன். உங்கள் தாயாருக்கு என் துவா சலாம் சொல்லுங்கள். நான் மிக மிக கேட்டதாகச் சொல்லுங்கள். உங்கள் பெரிய உம்மா அவர்களுக்கும் என் துவாச் சலாம் சொல்லுங்கள் உங்கள் மனைவியார் குழந்தை களுக்கும் எனது நல்லாசியும் துவாவும் கிடைக்கட்டும்.

என்றும் உங்கள் உண்மையுள்ள
கே.எம்.எம். ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ்

## MATHI COLOURS (PVT) LTD.

**BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE**

உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்!....

**PRINTERS & WEDDING CARDS**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறின்டிங் தேவைகளையும் உடனுக்குடன்
தரமாகவும், நேர்த்தியாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...

திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை




NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.

021 222 9285

mathicolours@gmail.com

CUSTOMER CARE
077 722 2259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி கு. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org